பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 04 செவ்வாய்க்கிழமை (17.01.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :51

## இயல்புநிலை மீண்டும் தோன்றும்வரை பல்கலை. கற்றல் செயற்பாடு நிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜன.17

கல்விச் செயற்பாடுகளை சீராக மேற்கொள்ளக்கூடிய இயல்புநிலை தோன்றும்வரை கற்றல்செயற்பாடுகளை நேற்றுமுதல் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இடைநிறுத்தியுள்ளனர்.

இதனை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாசுக்கு உத்தியோகபூர்வமாக நேற்று அறிவித்துள்ளது.

அந்த அறிவித்தல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புதிய ஜனாதிபதியும், புதிய இராணுவத் தளபதியும் பதவியேற்ற பின்னர் அண்மைக் காலமாக தமிழ் மக்கள் மீதும், தமிழ் மாணவர்கள் மீதும் என்றுமில்லாதவாறு பல்வேறு அழுத்தங்களையும், பல்வேறு தாக்குதல்களையும் ஸ்ரீலங்கா இராணுவம் திட்டமிட்டு மேற்கொண்டுவருகின்றது. சுற்றிவளைப்புக்கள், பெண்களைப் பாலியல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதர் இன்று கிளிநொச்சிக்கு

கிளிநொச்சி,ஜன.17

இலங்கைக்கான நோர்வேத்தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இன்று கிளிநொச்சி வருகின்றார்.

தரைமார்க்கமாக வரும் அவர் முற்பகல் 11 மணிக்கு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசுவார்.

இன்றைய அரசியல் நிலை தொடர்பாகவும் - எதிர்வரும் 23ஆம் திகதி இலங்கை வரவுள்ள நோர்வே சர்வதேச அபிவிருத்தி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தாய், 2 புதல்விகள் கோரக் கொலை!

# தந்தையும் மகனும் சூட்டுப் படுகாயம்!!

## வெள்ளைவானில் வந்த ஆயுதக்கும்பல் மானிப்பாயில் அதிகாலை வெறியாட்டம்!!

நள்ளிரவுப் படுகொலைகளால் பீதியில் உறைந்தது குடாநாடு!

மானிப்பாய்,ஜனவரி.17

மானிப்பாய்ப் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்கு நேற்று அதிகாலை வெள்ளை வானில் வந்த ஆயுதபாணிகள் நடத்திய வெறியாட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் இரண்டு புதல்விகளும் துடிதுடித்துப் பலியாகினர். தந்தையும் மகனும் படுகாயமடைந்தனர்.

கறுப்புச் சீலையால் முகத்தை மறைத்துக் கட்டியவாறு காணப்பட்ட கொலையாளிகள் வீட்டிலிருந்தோரை வெளியே அழைத்து துப்பாக்கிகளால் வெறித்தனமாகச் சுட்டு இந்தப் படுகொலைகளைப் புரிந்திருக்கின்றனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)




## சூட்டுச் சம்பவங்கள்

### நெல்லியடியில்....

கரவெட்டி,ஜன.17

நெல்லியடி, ராஜகிராமத்தில் கூலித் தொழிலாளியான இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக்காலை 7.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான நவரட்ணம் ஜெகதீஸ்வரன் (வயது 28) என்ப

(12 ஆம் பக்கம் பார்க்க)

### இராசபாதையில்....

யாழ்ப்பாணம், ஜன.17

நீர்வேலி கரந்தன் பகுதியில் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டார். தலையிலும், வயிற்றிலும் குண்டு பாய்ந்த நிலையில் மிகவும் ஆபத்தான கட்டத்தில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். அவர் நேற்றுமுன்னிரவு

(12 ஆம் பக்கம் பார்க்க)

### அக்கரைப்பற்றில்....

ஆலையடிவேம்பு, ஜன.17

அக்கரைப்பற்றில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர்.

நேற்று நண்பகல் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. அக்கரைப்பற்று டீன்ஸ் வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சந்திரநாதன் சதீஷ்குமார் (வயது 23), கோபால கிருஷ்ணன் சுரேஷ் (வயது 16) ஆகியோரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர். இவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பதிவுத் திருமணமாகி இரண்டே வாரங்கள்

படுகொலையுண்டவர்களில் ஒருவரான ரேணுகாவுக்கு இரண்டு வாரங்களின் முன்னரே பதிவுத்திருமணம் நடைபெற்றது. இந்தக் கொடூரச் சம்பவத்தின் போது அவரது கணவரும் வீட்டிலேயே இருந்தார். ஆனால், அவர் கொலையாளிகளின் கண்ணில்படாததால் உயிர் பிழைத்தார். (8)

## உரும்பிராயில் சடலம்

உரும்பிராய் சந்திக்கு அண்மையில் சடலம் ஒன்று கிடப்பதாக நேற்றுப் பின்னிரவு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

நேற்றிரவு 8.30 மணியளவில் அப்பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டதாகவும் பின்னர் படையினர் அங்கு குவிக்கப்பட்டதால் மேலதிக தகவல்களைப் பெற முடியவில்லை என்றும் - பிரதேச செய்தியாளர்கள் தெரிவித்தனர். (ஒ)

## மனைவியும், மகள்கள் இருவரும் கண்முன்னே சூடுபட்டு வீழ்ந்தனர்

### அச்சத்தால் எவரும் உதவிக்கு வரவில்லை

வலி.வடக்கு,ஜன.17

என் கண் முன்னே மனைவியும், மகள்களும் சூடுபட்டு வீழ்ந்தனர். அச்சத்தால் எவரும் உதவிக்கும் வரவில்லை.

இவ்வாறு தனது கையறு நிலையை கூறினார் மானிப்பாய் படுகொலைச் சம்பவத்தில் காயமடைந்தவரான நாகேந்திரம் போஜன்.

அவர் மேலும் கூறியதாவது:-

அன்று நள்ளிரவு 12.40 மணியளவில் வீட்டின் மதிலை ஏறிக் குதித்து வந்தவர்கள் 'கதவைத் திறவடா சோதிக்க வேண்டும்' எனச் சத்தமிட்டார்கள்.

கதவைத் திறந்ததும் முற்றத்தில் 9 பேர் சிவில் உடையில் துப்பாக்கிகளுடன் நின்றார்கள். அவர்களில் ஒருவர் மட்டும் கறுப்புத் துணியால் முகத்தை மூடிக் கட்டியிருந்தார்.

என்னைக் கையை உயர்த்தும்படி கூறிய போது எனது இரண்டாவது மகள் சண்முகா வீட்டிலிருந்து வெளியே ஓடிவந்தார். அவரைக் கண்டதும் அவரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். சூடுபட்டு அவர் வீழ்ந்தார். அதனையடுத்து மனைவியும், மூத்த மகளும் அலறியபடி ஓடி வந்தார்கள்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய் ராணுவ முகாமிலிருந்தே வானில் கொலையாளிகள் வந்தனர்

### யாழ். அரசியற்றுறைப் பொறுப்பாளர் குற்றச்சாட்டு

பளை,ஜன.17

மானிப்பாய் இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட வெள்ளை வானில் வந்தவர்களே மானிப்பாயில் படுகொலைகளைப் புரிந்துள்ளனர்.

- இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

மானிப்பாயில் நேற்று அதிகாலை ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து வெளியிட்ட கண்டனச் செய்தியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அக்கண்டனச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மானிப்பாயில் நேற்று அதிகாலை இடம் பெற்றுள்ளது. அப்பாவிக் குடும்பத்தி

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம்,ஜன.17

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் நாச்சிமார் கோயிலுக்குச் சமீபமாக நேற்று மதியம் படையினர் மீது கிரனேட் வீசப்பட்டது. அதனைத் தொடர்ந்து படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

கிரனேட் வீச்சு மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தில் சேதமேதும் ஏற்பட்டதாகத் தெரியவரவில்லை. (ஒ-139)

## ஆறு மாவீரர்களுக்கு கிளிநொச்சியில் நினைவுக் கற்கள்

கிளிநொச்சி,ஜன.17

கடந்த காலங்களில் வெவ்வேறு சம்பவங்களின் போது வீரச்சாவடைந்த ஆறு மாவீரர்களின் நினைவாக கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுக் கற்கள் நாளை புதன்கிழமை பிற்பகல் திரைநீக்கம் செய்துவைக்கப்படவுள்ளன.

வீரச்சாவடைந்த மாவீரர்களின் திருவுருப் படங்கள் இன்று செவ்வாய்க்கிழமை அவர்களது இல்லங்களில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

நாளை காலை அங்கிருந்து உருவப்படங்கள் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு முற்பகல் 10 மணிக்கு பளை மத்திய கல்லூரியில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அங்கு வீரவணக்கக் கூட்டம் இடம்பெறும்.

தொடர்ந்து அங்கிருந்து கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு உருவப்படங்கள் எடுத்துச் செல்லப்பட்டு பூரண இராணுவ மரியாதையுடன் நினைவுக் கற்கள் திரைநீக்கம் செய்து வைக்கப்படும்.

வீரச்சாவடைந்த மாவீரர்கள் அறுவரினதும் விவரங்களைப் புலிகள் வெளியிட்டுள்ளனர். அவை வருமாறு:-

✱ 15.07.1987 அன்று மட்டுவிலில் தேச விரோதிகளின் தாக்குதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கை சச்சி (செல்லத்துரை சச்சிதானந்தன் - புலோப்பளை மேற்கு, பளை).

✱ 09.11.1987 அன்று மானிப்பாய் பகுதியில் இந்திய இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலில் வீரச்சாவடைந்த லெப்ரினன் நகுலன் (செல்லத்துரை சூரிய பிரதாபன் - புலோப்பளை மேற்கு, பளை).

✱ 30.05.1987 அன்று யாழ்ப்பாணம் வீமன்காமம் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் நடைபெற்ற மோதலில் வீரச்சாவடைந்த கப்டன் செல்வம் (செல்லத்துரை தெய்வசபானந்தன் - புலோப்பளை மேற்கு, பளை).

✱ 17.05.1992 அன்று சுகயீனம் காரணமாக சாவடைந்த நாட்டுப்பற்றாளர் வள்ளிப்பிள்ளை (செல்லத்துரை வள்ளிப்பிள்ளை - புலோப்பளை மேற்கு, பளை)

✱ 27.11.1989 அன்று புலோப்பளைப் பகுதியில் தேச விரோதிகளின் தாக்குதலின் போது வீரச்சாவடைந்த வீரவேங்கை பவுணன் (செல்லத்துரை யோகேஸ்வரன் - தம்பகாமம், பளை)

✱ 01.02.1998 அன்று கிளிநொச்சிப் பகுதியில் இராணுவத்தினருடன் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரச்சாவடைந்த லெப்டினன் பத்திரா (துரைசிங்கம் சந்திரமதி - மல்வில், இயக்கச்சி, பளை). (ஐ-203)

## சோதனையிடுவதாக நடித்து வீட்டில் நகை, பணம் கொள்ளை

யாழ்ப்பாணம்,ஜன.17

வீட்டைச் சோதனையிடப்போவதாகக் கூறிய ஆயுததாரிகள், தேடுதலை முடித்து விட்டுச் சென்றபின்னர் வீட்டிலிருந்த நகை, பணம் என்பவை காணாமற்போயுள்ளன.

நுணாவிலில் செல்லையா கந்தையா என்பவரின் வீட்டில் நேற்றுமுன்தினம் இரவு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அன்றிரவு 9 மணியளவில் ஆயுதங்களுடன் வந்த 5பேர் வீட்டிலிருந்தவர்களை அழைத்து 'விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளதா? என்று விசாரித்தனர் என்றும் -

பின்னர் அவர்களை வெளியே நிறுத்திவிட்டு ஆயுததாரிகள் வீட்டுக்குள் சென்று தேடுதல் நடத்திவிட்டுச் சென்றனர் என்றும் - கூறப்படுகிறது.

வந்தவர்கள் சிங்களம் மற்றும் தமிழ்மொழிகளில் பேசிக்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. அதன்பின்னர் வீட்டினுள் சென்று பார்த்தபோது தங்கச் சங்கிலி 15 ஆயிரம் ரூபா ரொக்கப் பணம், கைத்தொலைபேசிகள் இரண்டு ஆகியவை காணாமற்போயிருந்தன. இது குறித்து சாவகச்சேரிப் பொலீஸாரிடம் முறையிட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளார். (ஒ-15)

## வரணியில் கிளைமோர் மீட்பு

தென்மராட்சி,ஜன.17

வீதியோரம் பனை வடலியில் வைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டுகள் இரண்டை படையினர் மீட்டுள்ளனர்.

நேற்றுக் காலை ரோந்துப் பணியில் ஈடுபட்ட படையினர் வரணி மகாவித்தியாலயத்திற்கும் சுட்டிபுரம் கண்ணகை அம்மன் கோயிலுக்கும் இடைப்பட்ட கொடிகாமம் வரணி வீதியிலேயே வெடிகுண்டுகளை மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தை அடுத்து சுமார் இரண்டு மணி நேரம் இவ் வீதியில் பொதுமக்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

வாகனங்கள் வேறு பாதைகள் ஊடாகத் திருப்பி விடப்பட்டன.

இதேவேளை, வரணிச் சந்திப் பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் துப்பாக்கி வேட்டு சத்தம் கேட்டதால் அப் பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது.

வீதிப் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த சிப்பாயின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்ட பின்னர் அப்பகுதி வழமைக்குத் திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## மருத்துவமனைகளுக்கு செல்வோர் அ.அட்டைகளை எடுத்துச் செல்லவும்

தென்மராட்சி,ஜன.17

மருத்துவ மனைகளின் வார்டுகளில் நோயாளரை சேர்க்கும்போது அவர்களதும் அவர்களை அழைத்து வருபவர்களதும் அடையாள அட்டைகள் அவசியமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் மருத்துவ மனைகளின் விடுதிகளில் நோயாளர்களை அனுமதிக்கும்போது பதிவு செய்யப்படும் படிவங்களில் நோயாளியின் அடையாள அட்டை இலக்கம் பதிவு செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் நோயாளரினதும் அவரை விடுதியில் சேர்க்க வருவோரதும் அடையாள அட்டைகள் உடன் கொண்டுவரப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதியில் நோயாளர் அனுமதிக்கப்படும் போது நான்கு படிவங்களில் பதிவுகள் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## நாடளாவிய சுவரொட்டிப் போட்டியில் யாழ்.நுண்கலை மாணவர்கள் சாதனை

யாழ்ப்பாணம்,ஜன.17

தேசிய உற்பத்தித் திறன் செயலகம் நாடளாவிய ரீதியில் பல்கலைக் கழகங்கள் இடையே நடத்திய சுவரொட்டிப் போட்டியில் அதிவிசேட இடத்தை (Special Merit) யாழ்.மாணவன் ஒருவர் பெற்றுள்ளார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் அமைச்சின் கீழ் நடத்தப்பட்ட இந்தப் போட்டியில் யாழ்.பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைத் துறையைச் சேர்ந்த நான்காம் வருட மாணவனான செல்வன் ரமேஷ்பிரகாஷ் என்பவரே அதிவிசேட இடத்தைப் பெற்றிருக்கிறார். விசேட இடங்களும் நுண்கலைத்துறை மாணவர்கள் இருவருக்கே கிடைத்துள்ளன.

நுண்கலைத்துறை நான்காம் வருட மாணவர்களான செல்வி ச.சாருபா, செல்வன் ப. கோகிலன் ஆகிய இருவருமே விசேட இடத்தை (Merit) பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் கடந்த புதன்கிழமை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு, தொழில்துறை அமைச்சர் அதாவுட செனவிரத்ன பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினார். (ஐ)

## காரைநகரில் நேற்று பலர் கைது

யாழ்ப்பாணம்,ஜன.17

காரைநகர்ப் பகுதியில் நேற்று பிற்பகல் கடற்படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது பத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

காரைநகர் வலந்தலையில் வெடிபொருள்கள் சில நேற்று படையினரால் மீட்கப்பட்டன என்று தகவல் வெளியான நிலையில் - கடற்படையினர் இந்தத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் மூன்று மாணவர்களும் உள்ளடங்குவர் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை, தேடுதல் நடவடிக்கையின் போது பொதுமக்கள் தாக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது. (ஒ-13)

## சாதனையை நோக்கி இந்தியா!

லாகூர்,ஜன.17

இந்திய - பாகிஸ்தான் அணிகளிற்கிடையில் லாகூரில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்டின் நான்காம் நாள் ஆட்டம் இடையே மழையால் பாதிக்கப்பட்ட போதும் இந்திய அணி ஓட்டங்களைக் குவித்தது.

நேற்றைய ஆட்டமும் மழையால் தாமதமாகவே ஆரம்பித்தது. மூன்றாம் நாள் ஆட்டம் முடிவடையும் போது 96 ஓட்டங்களுடன் இருந்த சேவாக் நேற்று ஆட்டம் தொடங்கிய இரண்டாவது ஓவரிலேயே தனது 11ஆவது சதத்தைப் பூர்த்திசெய்தார். எனினும் 1.5 பந்துகள் வீசப்பட்ட நிலையில் மீண்டும் மழை குறுக்கிடப் போட்டி சுமார் இரண்டு மணித்தியாலம் தாமதித்தது.

அதன் பின்பு ஆடுகளமிறங்கிய சேவாக்கும், ராவிட்டும் தமது வழமையான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். சேவாக் 182 பந்துகளில் தனது இரண்டாவது இரட்டை சதத்தை பூர்த்தி செய்தார். அவர் கிரிக்கெட் வரலாற்றில் அதிவிரைவாக பெறப்பட்ட இரட்டைச் சதங்களின் வரிசையில் இரண்டாவது இடத்தைத் தனதாக்கிக் கொண்டார். நியூஸிலாந்து அணியின் நாதன் அஸ்ரில் 153 பந்துகளில் இரட்டை சதத்தை பூர்த்தி செய்து சாதனையாளராகத் திகழ்கின்றார். அதேவேளை, இந்திய அணி சார்பாக டெஸ்ட் ஆட்டமொன்றில் விரைவாக சதம் பெற்ற சாதனையை 23 ஆண்டுகளின் பின் சேவாக் முறியடித்தார். 1973ஆம் ஆண்டு 94 பந்துகளில் கவாஸ்கர் சதம் பெற்றிருந்தார்.

அதேவேளை மறுமுனையில் ராவிட் தனது 21 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். அணித் தலைவர் பதவியேற்றபின் அவர் அடிக்கும் முதலாவது சதம் இதுவாகும். ராவிட்டும் சேவாக்கும் இணைந்து முதலாவது விக்கெட்டுக்காக இதுவரை 403 ஓட்டங்களை பெற்றுள்ளனர். 414 ஓட்டங்களினை பெற்றால் உலக சாதனையை முறியடிக்கலாம். 1956 ஆண்டு இந்தியாவின் மங்கட் மற்றும் பங்கஜ்ரோஜ் ஆகியோர் சென்னையில் பெற்ற 413 ஓட்டங்களே சாதனையாக விளங்குகின்றது. நேற்றைய ஆட்டம் போதிய வெளிச்சமின்மை காரணமாக குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னரே இடைநிறுத்தப்பட்டது. (ம-6)

'சொலிடார்' நிறுவனத்தின் ஏற்பாட்டில்

## ஆழிப்பேரலை குறித்த கண்காட்சி மருதங்கேணியில் நேற்று ஆரம்பம்

கிளிநொச்சி,ஜன.17

'சொலிடர்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பான ஓவியம் மற்றும் புகைப்படக் கண்காட்சி நேற்று மருதங்கேணி திட்ட ஒருங்கிணைப்புச் செயலகத்தில் முற்பகல் 11 மணியளவில் ஆரம்பமானது.

சொலிடார் நிறுவன திட்ட முகாமையாளர் கே.வரதராஜ் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் ஜேம்ஸ் மார்ட்டின் கண்காட்சி மண்டபத்தை சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்தார்.

மங்கள விளக்கினை நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர்களான சபா நாகநாதன், ஜேம்ஸ் மார்ட்டின், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லூயிஸ் 'சொலிடார்' தகவல் பிரிவு பொறுப்பதிகாரி சுலோசனை ஆகியோர் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து சொலிடார் நிறுவனப் பிரதிநிதிகளான ஜேம்ஸ் மார்ட்டின் சபாநாகநாதன், டிக்ஷி பென்ஜமின் ஆகியோர் அங்கு உரையாற்றினர்.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்படுத்திய அழிவுகள், மீள்கட்டுமானப் பணிகள் போன்ற பல்வேறு வகையான, புகைப்படங்களும் ஓவியங்களும் இதில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

நேற்றையதினம் ஏராளமான பொதுமக்களும் மாணவர்களும் கண்காட்சியைப் பார்வையிட்டனர். இக் கண்காட்சி எதிர்வரும் 19ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறவுள்ளது. (த)



மருதங்கேணியில் நேற்று ஆழிப்பேரலை குறித்த கண்காட்சியை நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் ஜேம்ஸ் மார்டின் திறந்து வைப்பதையும், பிரமுகர்கள் மங்கள விளக்கேற்றுவதையும், மாணவர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: அலங்காரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# அமைதித் தீர்வுக்கான வாய்ப்புகளை அருகச் செய்யும் செயற்பாடுகள்

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் சமாதான முயற்சிகளுக்கு அனுசரணை வழங்குகின்ற நோர்வேத் தரப்பின் விடேச தூதுவரான எரிக் சொல்ஹெய்ம் அடுத்த வாரம் இலங்கை வருகின்றார்.

அக்காலத்தை ஒட்டி, தற்போது லண்டனில் தங்கியிருக்கும் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும் வன்னி வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விஜயங்கள், அவற்றைத் தொடர்ந்து இடம் பெறப் போகின்ற சமாதான முயற்சிகள் போன்றவை தற்போதைய நெருக்கடி நிலைக்கு - இக்கட்டுக் கட்டத்துக்கு - ஏதேனும் தீர்வைத் தேடித் தராதா என்ற ஏக்கம் - அங்கலாய்ப்பு - எதிர்பார்ப்பு - இலங்கைத் தீவு மக்களின் மனதில் தொக்கி நிற்பதை உணரக் கூடியதாக இருக்கிறது.

எதிர்காலத் தீர்வு ஒரு புறமிருக்க, இப்போது நாட்டில் வெடித்திருக்கும் வன்முறைகளுக்கு - தாக்குதல்களுக்கு - எரிக் சொல்ஹெய்மின் விஜயம் மற்றும் மதியுரைஞர் பாலசிங்கத்தின் உத்தேச வருகைத் திட்டம் ஆகியவற்றை ஒட்டி தற்காலிக முடிவேனும் - தணிவேனும் - கிட்டாதா என்ற ஆதங்கம் கூட மக்களின் மனதில் பெரும் நப்பாசையாகத் தங்கியிருக்கின்றது.

ஆனால், அதற்கும் வாய்ப்பு இல்லையோ என்ற சூழ்நிலை இப்போது உருவாகி வருவதை உணரமுடிகின்றது.

கிழக்கில் ஒட்டுப்படைகளை வைத்து அரங்கேற்றிய வன்முறைகளை வடக்கிலும் மேற்கொள்ளும் அரச படைகளின் புலனாய்வுப் பிரிவினரின் திட்டம் கன கச்சிதமாகச் செயற்படுத்தப்பட்டு வருவதைப் பார்க்கும் போது அமைதி முயற்சிகளும், சமாதான எத்தனங்களும் வெறும் கானல் நீரே என்பதும் யுத்தம் தவிர்க்க முடியாத யதார்த்தம் என்பதும் துலாம்பரமாகின்றன.

இந்த ஒட்டுப்படை வன்முறைகளின் வரிசையில் கடைசியாக நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணம் மானிப்பாயில் குடாநாட்டு மக்களால் பெரிதும் மதிக்கப்படும் சமூக சேவையாளரான போஜன் நாகேந்திரத்தின் மீதும் அவரது குடும்பத்தினர்மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அமைந்திருக்கின்றது. போஜனின் மகள் புலிகளின் 'நிதர்சனம்' திரைப்படப் பிரிவு தயாரித்த 'அம்மா நலமா' படத்தில் முக்கிய கதாபாத்திரம் ஏற்று நடித்தவர். அத்தோடு போஜன் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர். இதற்காகவே இவர்களை இலக்கு வைத்து ஒட்டுப்படைகளும் சீருடையினரும் இந்தக் கொடூரத் தாக்குதல்களை நடத்தி யிருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

அமைதிப் பேச்சுகளை மீள ஆரம்பிக்கும் விடயத்தில் இப்போது முக்கியமான விவகாரம் பேச்சை எங்கு நடத்துவது என்பதல்ல. அதையும்விட முக்கிய விடயமாக இருப்பது பிணக்குக்குரிய இருதரப்பும் நேரடியாக அமர்ந்திருந்து பேசுவதற்குரிய சூழ்நிலை நிலவ வேண்டும் என்பதுதான்.

ஆனால், அந்த நிலைமை இப்போது இல்லை என்பதையும், அதனால் பேச்சுக்கான சூழ்நிலை அருகி வருகின்றது என்பதையும் இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக் காட்டியிருந்தோம்.

அந்தச் சூழ்நிலை மேலும் மேலும் மோசமடைந்து வருகின்றது என்பதே இன்றைய மெய்மை நிலைவரமாகும்.

சொல்ஹெய்மின் வருகையோடு அமைதிப் பேச்சை நடத்துவதற்கான இடம் குறித்து ஓர் இணக்கநிலை எட்டப்பட்டால் கூட, பேச்சுக்கான சூழ்நிலை இல்லாத சமயத்தில் பேச்சு சாத்தியமாகப் போவதேயில்லை என்பது இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடியதே.

ஒட்டுப்படைகளின் செயற்பாட்டுக்கு யாழ். குடாநாட்டையும் ஒரு களமாக்கும் முயற்சி, மோசமான பின் விளைவுகளைக் கொண்டு வரும் என்பதை அரசுத் தரப்பு உணர்ந்து கொள்ளவேண்டும்.

யுத்தநிறுத்த உடன்பாட்டின் அடிப்படை ஏற்பாடுகளுக்கு முரணான இந்த நடவடிக்கை, அமைதிப் பேச்சுகள் மீள ஆரம்பிக்கப்படுவதற்குத் தடையாக அமைவதோடு நின்றுவிடாது. களத்திலும் மோசமான பின் விளைவுகளை ஏற்படுத்தி மீண்டும் ஒரு யுத்தத்துக்கான விரிசலை அது திறந்து விடக்கூடியது.

இவ்வாறு ஒட்டுப்படைச் செயற்பாடுகளைக் கட்டவிழ்த்து விடும் நடவடிக்கை வெறுமனே அரச படைகளின் புலனாய்வுத்துறை மட்டத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றதா அல்லது படைத் தலைமைத் தரத்தில் தீர்மானிக்கப்படுகின்றதா அல்லது அரசுத் தலைமை மட்டத்தின் அங்கீகாரத்துடன்தான் முன்னெடுக்கப்படுகின்றதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

ஆனால், எது எப்படியென்றாலும் அமைதித் தீர்வுக்கான வாய்ப்புகளுக்கு வேட்டு வைக்கும் இத்தகைய போக்குகளின் பெறுபேறு - விளைவு - அரசுத் தலைமையையே நேரடியாகப் பாதிக்கும் என்பதால் இது குறித்து அரசுத் தலைமை அதிகம் கவனம் எடுப்பது நல்லது. அல்லது விபரீத விளைவுகளை அரசுத் தலைமைதான் முதலில் சந்திக்கவேண்டியிருக்கும் என்பதே முதல் உண்மையாகும்.



வங்கக் கடலில் வீரச்சாவடைந்த கேணல் கிட்டு உட்பட பத்து மாவீரர்களினதும் நினைவு அஞ்சலி நிகழ்வு நேற்று தீருவில் சதுக்கத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. மாவீரர் ஒருவரின் தாயார் நினைவுத் தூபிக்கு ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவிக்கிறார்.
(படங்கள் : சுந்தரலிங்கம்)

## கிட்டு உட்பட 10 வேங்கைகளுக்கு தீருவில் தூபியில் நேற்று அஞ்சலி

கரவெட்டி,ஜன.16

வங்கக் கடலில் வீரச்சாவடைந்த விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவினதும் ஏனைய ஒன்பது மாவீரர்களினதும் நினைவு அஞ்சலி வைபவம் நேற்று தீருவில் சதுக்கத்தில் இடம்பெற்றது.

கிட்டு உட்பட 10 மாவீரர்களினதும் நினைவுத் தூபிக்கு மாவீரர் மேஜர் கண்மணியின் தாயார் ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தார்.

காலை 9 மணியளவில் இந்த அஞ்சலி வைபவம் இடம்பெற்றது. வல்வெட்டித்துறை பிரதேச மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளதால் இந்த அஞ்சலி வைபவத்தில் குறைந்த எண்ணிக்கையான பொது மக்களே கலந்துகொண்டனர். (ஐ-70)

## பலத்த காற்றினால் பாடசாலைக் கூரை சேதம்

புங்குடுதீவு,ஜன.17

அண்மையில் பெய்த கடும் மழை, பலத்த காற்று என்பவற்றினால் புங்குடுதீவு மகாவித்தியாலயக் கூரை பலத்த சேதமடைந்துள்ளது.

பலத்த காற்றுக் காரணமாக பாடசாலையின் கூரை ஓடுகள் தூக்கி வீசப்பட்டுள்ளதுடன் சுமார் 500 ஓடுகள் நொறுங்கிவிட்டன என்று வித்தியாலய அதிபர் க.தர்மகுணசிங்கம் தெரிவித்தார். (எ-188)



நேற்று யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த போது எடுக்கப்பட்ட படங்கள். (எ-14)

## யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர்கள் நேற்று ஒருநாள் பணிப் புறக்கணிப்பு

### பாடசாலைச் சமூகம் மீதான தாக்குதலைக் கண்டித்து

யாழ்ப்பாணம்,ஜன.17

யாழ்.மத்திய கல்லூரிச் சமூகம் மீது தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வரும் தாக்குதலைக் கண்டித்து கல்லூரி ஆசிரியர்கள் நேற்று ஒருநாள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை ஆரம்பமான இந்தப் பணிப்புறக்கணிப்பில் யாழ்.மத்திய கல்லூரியின் ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

பணிப்புறக்கணிப்புக் குறித்து யாழ். மத்திய கல்லூரியின் ஆசிரியர் வட்டம் வெளியிட்டுள்ள மகஜரில் -

எமது பாடசாலையின் (தேசியப் பாடசாலை) முன்னாள் அதிபர் க.இராசதுரை 12.10.2005 அன்றும் இரவுக் காவலாளி கி.விமலேஸ்வரன் 24.12.2005 அன்றும் கடமையின் போது சுடப்பட்டு மரணமடைந்துள்ளனர்.

எமது கல்லூரி ஆசிரியர் போ.உல்லாசன் 16.01.2006 அன்று அதிகாலை அவரது வீட்டில் வைத்து குடும்பத்தினருடன் சுடப்பட்டுள்ளார்.

இதில் அவரது குடும்ப உறுப்பினர் மூவர் உயிரிழந்துள்ளனர்.

ஆசிரியரும் அவரது தந்தையாரும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய நிகழ்வுகள் எமது கல்லூரி ஆளணியினருக்கு தொடர்ச்சியாக நடைபெறுவதால் நாம் அச்சமும் உளப்பாதிப்பும் அடைந்து கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் முழுமையான அர்ப்பணிப்புடன் ஈடுபடமுடியாத நிலையில் உள்ளோம். இனிவரும் காலங்களில் இவ்வகையான துக்ககரமான நிகழ்வுகள் இடம்பெறாதிருப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம். - என்று அதில் உள்ளது.

இந்த மகஜர் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்.அரச அதிபர் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த மகஜரின் பிரதிகள், கல்லூரி அதிபர், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்.அரச அதிபர் மற்றும் கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகள் பிரிவு, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், மனித உரிமை ஆணைக் குழு, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆகியவற்றுக்கு அனுப்பிவைக் கப்பட்டுள்ளன. (எ-14)

## மயானத்தைப் பயன்படுத்த அனுமதி மறுப்பு

வலி.தெற்மேற்கு,ஜன.17

மாதகல் கடற்கரையில் உள்ள இந்து மயானத்தில் தகனக் கிரியைகளை மேற்கொள்வதற்கும் இறந்தவர்களின் அஸ்தியைக் கடலில் கரைப்பதற்கும் அங்குள்ள கடற்படையினர் தடை விதித்துள்ளனர்.

இதனால் மாதகல் பகுதியிலுள்ள இந்துசமய மக்கள் இறந்தவர்களின் சடலங்களை தகனம் செய்வதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர்.

தகனம் செய்வதற்குப் பொருத்தமான வேறு இடம் ஒன்றைத் தெரிவு செய்து வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று மாதகல் இந்து சமய அபிவிருத்திச் சங்கம் யாழ். மாவட்ட அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள அவசர மகஜர் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

நீண்டகாலமாக மாதகலிலுள்ள இந்து மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்த - மாதகல் கடற்கரைக்குச் சமீபமாகவுள்ள - இந்து மயானம் கடந்த 1992 ஆம் ஆண்டு உயர் பாதுகாப்பு வலயம் என்று காரணம் காட்டி பாதுகாப்புப் படையினரால் பயன்பாட் டுக்கு தடை செய்யப்பட்டது. அதன் பிறகு தற்காலிகமாக மாதகல் குசுமான் துறைக்கு அருகில் தனியார் காணி ஒன்று மயானமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த வாரம் இறந்த ஒருவரின் அந்தியேட்டிக் கிரிகையின்போது அஸ்தியைக் கடலில் கரைப்பதற்குச் சென்றபோது அங்கு கடமையிலிருந்த கடற்படையினர் அதற்கு அனுமதிக்க மறுத்துவிட்டனர். பொன்னாலையிலுள்ள கடற்படை முகாம் பொறுப்பதிகாரியிடம் பெற்ற முன் அனுமதிக் கடிதத்தைக் காட்டியும் அவர்கள் அதற்கு அனுமதி வழங்காது அங்கிருந்து 5 மைல் தூரத்திலுள்ள சம்பில்துறைக்கு கொண்டு சென்று அஸ்தியைக் கரைக்குமாறு கூறி திருப்பி அனுப்பிவிட்டனர் இதனால் இறந்தவர்களின் சடலங்களை வழமைபோல குசுமான்துறை கடற் கரைக்குச் சமீபமாகவுள்ள மயானத்தில் தகனம் செய்வதற்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதுவரை காலமும் பொன்னாலைக் கடற்படை முகாம் அதிகாரியின் முன் அனுமதிக் கடிதம் பெற்றே இக்கடற்கரைக்கு சென்று தகனக்கிரியை மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது அதற்கும் அனுமதி மறுக்கப்படும் பட்சத்தில் எமக்கு வேறு ஒரு பொருத்தமான இடம் ஒன்றைத் தகனக் கிரியை செய்வதற்கு ஏற்பாடு செய்து தருமாறு வேண்டிக்கொள்கின் றோம். வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கொல்களம் அமைந்துள்ள சுற்றாடலில் தற்காலிக மயானம் ஒன்றை ஏற்பாடு செய்து தருமாறும் எமது சங்கம் கேட்டுக்கொள்கின்றது. (ஐ-135)

### நாளை

தை 5
புதன்கிழமை
18.01.2006
திதி: சதுர்த்தி
முன்னிரவு:11.42 வரை
நட்சத்திரம் : பூரம்
முழுவதும்
சுபநேரம் : 05.05 - 06.35
ராகுகாலம் : 12.35 - 02.05
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஏழைகளின் வீட்டிற்கு ஒரே வாசல்;
வசதிபடைத்தவர்களின் வீட்டிற்கு நான்கு பக்கமும் வாசல்கள்.
ஓர் அறிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
10 - 10 - 1925



விண்ணில்
29 - 12 - 2005

### அமரர் இளையதம்பி நடராசா

*திதி: 17.01.2006 திருதியை*

**என்றும் எம் நினைவுகளில் - நீங்கள்**
**நீங்காது இருப்பீரே!**

*47, நொத்தாரிஸ் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*
*(45415)(18-32-45)*

உடன்பிறந்தோர், மக்கள்,
மருமக்கள், பேரமக்கள்,
பூட்டமக்கள்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

*மண்ணில்*
*24 - 09 - 1931*



*விண்ணில்*
*28 - 01 - 2005*

### அமரர் மாணிக்கம் இராசரத்தினம்

ஆண்டொன்று சென்றதுவே எம் தெய்வமே!
உங்கள் நினைவு ஆறவில்லை எம் மனதிலே
எமைக்காத்து வழிநடத்தி நின்றீர்களே
உங்கள் நிழல் கூட இல்லாது தவிக்கின்றோமே!

பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி,
இணுவில் தெற்கு,
இணுவில்.
(45411)
(24-34-45)

- குடும்பத்தினர்.

## மூத்த ஓய்வூதியர் கேடயம் வழங்கிக் கௌரவிப்பு

வலி.வடக்கு,ஜன.17

வலி.வடக்கு ஓய்வூதியர் கூட்டுறவுச் சங்கம் தமது மூன்று மூத்த உறுப்பினர்களைக் கௌரவித்துள்ளது.

இந்த் நிகழ்வு தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் க.நடராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

மூத்த உறுப்பினர்களான க.முருகையா, செ.நவரத்தினம், ம.கந்தசாமி ஆகியோரே நினைவுக் கேடயம் வழங்கியும் மலர்மாலை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் எஸ்.முரளிதரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் க.கனகசபாபதி கலந்துகொண்டார்.

(எ-86-190)

## மகாகும்பாபிசேகம்

யாழ்ப்பாணம்,ஜன.17

உரும்பிராய் கூழாவடி காட்டுவைரவர் என அழைக்கப்படும் ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிசேகப் பெருவிழா எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு நாளை புதன் கிழமை விசேட வழிபாடு, பூசை என்பன இடம்பெறும். நாளைமறுதினம் வியாழக் கிழமை முற்பகல் 10 மணிமுதல் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும்.

(எ-204)

## உள்ளூராட்சித் தேர்தல்: கொழும்பில் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜன.17

உள்ளூராட்சி சபைத் தேர்தல் கடமைகளை முன்னெடுப்பது தொடர்பாக சகல உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்குமான சந்திப்பு எதிர்வரும் 20ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொழும்பில் நடைபெறவுள்ளது.

தலைமைத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

(எ-203-202)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆங்கில ஆசிரியை

### திருமதி ரேணுகா தியாகேஸ்வரன்

16.01.2006 அன்று அகால மரணமான
செய்தியைக் கேள்வியுற்று அதிர்ச்சியடைந்தோம்.
அன்னாரின் பிரிவினால் துயருறும்
அவரின் குடும்பத்தவரிற்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்கி
அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(45413)(34-45-18)

**பாடசாலைச் சமூகம்,**
**யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்.**

## முதலாம் ஆண்டு நினைவு

பிறப்பு
1932 ★ 10 ★ 12



இறப்பு
2005 ★ 01 ★ 18

### இன்னாசிமுத்து ஏவிரகாம்

(இலங்கை போக்குவரத்துச்சபை ஊழியர்)

*வாழ்வில் வழிகாட்டி ஒளியூட்டி*
*எம்மை வாழவைத்த தெய்வமே!*
*யுகமது வந்து வந்து சென்றாலும்*
*உங்கள் ஊக்கத்தின் உணர்வுகள்*
*எங்கள் உயிர்மூச்சில் கலந்தேயிருக்கும்.*

நாளை நடைபெறும் அன்னாரின் ஆன்ம விமோசன திருப்பலிப் பூசையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

பிரிவால் துயருற்றிருக்கும்
**மனைவி, பிள்ளைகள்.**

(45414) (24-18-34-45)

CARITAS - HUDEC JAFFNA

## VACANCY

1. **Secretary**

To work in full partnership with Caritas Office Manager in Program Activities. The post holder will have to undertake the following activities.

**Base Station:** Jaffna

**Main Duties:**

- The post holder reports directly to the Director of Caritas-Hudec-Jaffna & the Office Manager.
- Assists the Management on all secretarial duties & programmatic matters compilation of beneficiaries' data (livelihood, housing, and micro-finance), drafting letters independently etc.
- Translate documents to Tamil or English
- Prepare the minutes of weekly Coordination Planning Meetings.
- Maintain address lists and contact numbers of national and international staff and other essential telephone numbers of organizations, hotels and services useful for the programme.
- Assist the Senior Construction Managers in correspondence, reporting, letter drafting or contracts to the finance manager with external organizations, governments, banks, supplier's beneficiary groups, including the related e-mail.

**Requirements:**

- Good command of English
- Should have Secretariat / administrative background.
- Advanced computer skills in Excel (spreadsheet, data base management) Word (reporting, graphs) & internet email.
- Ability to work independently.
- Excellent analytical skills.
- Good team player.

Caritas-Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender.

If you would like to be a part of a dedicated team in a humanitarian context, please send us your CV & motivation letter including your contact no. & minimal two references to the following address, latest by

**28 January 2006**

**Father Jeyakumar**
**Caritas-Hudec**
**14 Mathew's Road, Deogu Street, Jaffna.**
**or E-mail: hudec@sltnet.lk**

## தமிழ்ப் பயிற்சி நெறிக்கான வேண்டுகை

**ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும்**
**வேண்டுகைகள் கோரப்படுகின்றன.**

**தகைமைகள்:**

**01. கல்வித் தகைமை:** க.பொ.த. உயர்தரத்தில் தமிழ்மொழியுட்பட மூன்று பாடங்களிலும் பொதுஅறிவிலும் தேறியிருத்தல் வேண்டும்.

**02. அகவை:** 01.01.1984 இற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**

01.வேண்டுகை முடிவு நாள்: **25.01.2006**

02.நேர்காணல் நடைபெறும் நாள்: **26.01.2006**
**முற்பகல் 10 மணி**

03. நேர்காணல் நடைபெறும் இடம்:
**மனித வள மேம்பாட்டுப் பகுதி,**
**நிதித்துறை,**
**நாகதம்பிரான் வீதி,**
**ஆனந்தபுரம்,**
**கிளிநொச்சி.**

04. நேர்காணலுக்கு வரும்பொழுது கல்வித் தகைமைச் சான்றிதழ் (க.பொ.த. சா/த , க.பொ.த. உயர்தரம்), பிறப்புச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், அடையாள அட்டை, ஏனைய சான்றிதழ்கள் ஆகியவற்றையும் அவற்றின் நிழற்படிகளையும் கொண்டுவருக.

05. வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:
**பொறுப்பாளர்,**
**மனிதவள மேம்பாட்டுப் பகுதி,**
**நிதித்துறை,**
**நாகதம்பிரான் வீதி,**
**ஆனந்தபுரம்,**
**கிளிநொச்சி.**

06. பயிற்சிக் காலம்: ஓர் ஆண்டு

07. பயிற்சியின் பின் ஐந்தாண்டுகள் நிதித்துறையில் பணியாற்றுதல் வேண்டும்.

08. பயிற்சியின் நிறைவில் தகைமைச்சான்றிதழ் வழங்கப்படும். அத்துடன், பொருத்தமான பணி வழங்கப்பெற்று நிதித்துறைச் சம்பளத்திட்டத்திற்கமைவாகச் சம்பளம் வழங்கப்படும்.

09. தமிழ்மொழியில் பற்றுடையவராகவும் ஆற்றலுடையவராகவும் தொடர்ந்து கற்கும் விரும்பமுடையவராகவும் அடையாளம் காணப்படுவோர் தமிழிற் சிறப்புக் கல்வியை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பெறும்.

10. கல்விச் செலவுகள் அனைத்தையும் நிதித்துறை பொறுப்பேற்கும்.

**ஆளுகை,**
**மனிதவள மேம்பாட்டுப் பகுதி, நிதித்துறை.**

(கி/47380)
(24-34-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர்களுக்கு நிலவும் பற்றாக்குறை காரணமாக பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் பெரும் நெருக்கடி

## 50 வைத்தியர்கள் தேவை; ஆனால் ஒருவர் மட்டுமே கடமையில்

கரவெட்டி,ஜன.17

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் டாக்டர்களுக்கு நிலவும் பற்றாக்குறை வைத்தியசாலையில் பெரும் நெருக்கடி நிலையைத் தோற்றுவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

50 வைத்திய அதிகாரிகள் தேவையான போதிலும் ஒரு வைத்திய அதிகாரி மட்டும் தற்போது கடமையில் உள்ளார் என்றும் -

அவரும் திருமலை அரசினர் வைத்திய சாலைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லவேண்டிய நிலையில் உள்ளார் என்றும் - வைத்திய சாலை வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

மேற்படி வைத்தியசாலையில் போதிய மருந்து வகைகள், 'எக்ஸ்ரே' கதிர்படப்பிடிப்பு சாதனங்கள், இருதயத் துடிப்பினை அளவிடும் கருவிகள் மற்றும் இரத்த வங்கி என்பன இருக்கின்ற போதிலும் டாக்டர்களுக்கு நிலவும் பற்றாக்குறை காரணமாக நோயாளர்கள் அவற்றின் பலாபலன்களைப் பெறமுடியாதிருப்பதாகவும் -

இதனால், மேற்படி வைத்தியசாலையை நாடிவரும் நோயாளர்கள் உரிய சிகிச்சைபெற முடியாது நீண்டதூரம் பயணித்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கோ, தனியார் வைத்தியசாலைகளுக்கோ செல்ல வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் -

இத்தகைய நிலைமை நோயாளர்களுக்கு வீண் செலவீனங்களை ஏற்படுத்துவதாகவும் - சுட்டிக்காட்டப்படுகிறது. (எ-70)

# நயினாதீவுத் துறைமுகத்தில் பயணிகள் தீவிர சோதனையில்

புங்குடுதீவு,ஜன.17

நயினாதீவு துறைமுகப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் துறைமுகம் ஊடாகப் பயணிக்கும் பொதுமக்களைத் தீவிர சோதனைக்குட்படுத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து நயினாதீவுக்குச் செல்வோரும் நயினாதீவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருவோரும் இத்தகைய சோதனை நடவடிக்கைகள் காரணமாக பலத்த சிரமங்களை எதிர்கொள்வதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

பயணிகள் மட்டுமன்றி அவர்கள் கொண்டு செல்லும் பொதிகளும் கடற்படையினரால் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதால் பயணத்தில் நேர தாமதம் ஏற்படுவதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர். (எ-ரி)

# சாந்தைக் கிராமத்தில் புனரமைக்கப்பட்ட வீடுகள் கையளிப்பு

வலி.தென்மேற்கு,ஜன.17

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் முதலாவது கட்டமாக நிறுவப்பட்ட வீடுகளை அவற்றின் உரிமையாளர்களுக்கு உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் வைபவம் கடந்த 7ஆம் திகதியன்று சில்லாலை, சாந்தையில் நடைபெற்றது.

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் 'நேர்ப்' வீடமைப்புத் திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, உலக வங்கியின் வீடமைப்புத் திட்ட யாழ். மாவட்டப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் வே.சாம்பசிவம், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்நிர்மாணத்துக்கான மேலதிக அரச அதிபர் மாவட்ட செயலர் பா.செந்தில்நந்தனன் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

பூர்த்திசெய்யப்பட்ட வீடுகள் யாவும் சம்பிரதாயமுறைப்படி கையளிக்கப்பட்டன. (எ-135)



ஊர்காவற்றுறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் தம்பாட்டி பனம் தோட்டத்தில் ஐயாயிரம் பனம் விதைகள் அண்மையில் நடுகை செய்யப்பட்டபோது எடுக்கப்பட்ட படம் இது. படத்தில் கூட்டுறவுப் பரிசோதகர் சி.குணாளன் பனம் விதை ஒன்றை நடுகை செய்வதையும் அருகில் சங்கத்தின் பொதுமுகாமையாளர் ம.யோகராசன், தலைவர் ஜீ.அ.பெர்னான்டோ, செயலாளர் சி.சுவேந்திரன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

(படம்: ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)

# கிராம அபிவிருத்தித் திணைக்கள ஏற்பாட்டில் வடலியடைப்பில் தையல் பயிற்சி ஆரம்பம்

வலி.தென்மேற்கு,ஜன.17

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் இவ்வருடத்திற்கான தையல் மற்றும் மனையியல் டிப்ளோமா பயிற்சிநெறி கடந்த 6ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.தியாகமூர்த்தி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பயிற்சி நெறியைத் திறந்து வைத்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்:-

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடத்தப்படும் இந்தத் தையல், மனையியல் பயிற்சிநெறிகள் கிராமப் பகுதிகளில் வசிக்கும் கஷ்ரப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த யுவதிகளுக்குப் பெரும் நன்மை பயப்பதாக அமைகின்றது.

குடும்பப் பொருளாதாரத்தை அதிகரிப்பதற்கும் சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கும் ஆற்றல்களை [illegible]த்தி செய்வதற்கும் இந்தப் பயிற்சிநெறி இப்பகுதி யுவதிகளுக்குப் பேருதவியாக அமையும்.

ஆகவே, ஊக்கமுடனும் முயற்சியுடனும் இங்கு நடத்தப்படவுள்ள பயிற்சிகளில் பங்குபற்றி பயன்பெறவேண்டும் - என்று குறிப்பிட்டார்.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலக பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுனேத்திரா சுதாகர், பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மு.பாலசிங்கம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் இவ்வைபவத்தில் கலந்துகொண்டர்.(எ-135)

## வரணியில் சட்ட விரோத மணல் அகழ்வு தொடர்கிறது

கரவெட்டி,ஜன.17

வரணிப் பகுதியில் நள்ளிரவு வேளை சட்ட விரோதமாக மணல் அகழும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வரணி கரம்பக்குறிச்சி, இடைக்குறிச்சி, நாவற்காடு போன்ற பகுதிகளில் தினமும் இவ்வாறு சட்ட விரோத மணல் அகழுதல் இடம்பெற்று வருவதாகவும் -

தொடரும் சட்ட விரோத மணல் அகழ்வு காரணமாக நெல் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் - கூறப்பட்டது. (எ-70)

# மானிப்பாய் அரசினர் ஆஸ்பத்திரியில் பொது அமைப்புகள் சிரமதானம்

நவாலி,ஜன.17

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை அமைந்துள்ள காணியை பொது அமைப்புகள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்து வருகின்றன.

மேற்படி வைத்தியசாலைக் காணியைத் துப்புரவு செய்து தருமாறு இப்பகுதியிலுள்ள 10 பொது அமைப்புகளை இந்த வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்தினர் கேட்டிருந்தனர்.

இதற்கமைய நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தினரும் கூழாவடி மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் இணைந்து அண்மையில் காணியின் ஒரு பகுதியைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்துள்ளனர்.(எ-100)




## வலி.தென்மேற்கில் வாகன வரி அனுமதிப்பத்திரம்

வலி.தென்மேற்கு,ஜன.17

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகத்தில் இவ்வருடத்திற்கான (2006) மோட்டார் வாகன வரி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுவருகின்றது.

வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய தினங்களில் முற்பகல் 9 மணிமுதல் 2 மணிவரை இந்த வாகன வரி அனுமதிப்பத்திரம் வழங்கும் பணி செயலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மோட்டார்சைக்கிள், கார், லொறி மற்றும் கனரக வாகனங்களின் உரிமையாளர்கள் இந்த அனுமதிப்பத்திரத்தை அதற்குரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-135)

## திருமுறை முற்றோதல்

வட்டுக்கோட்டை,ஜன.17

வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் தைப்பொங்கல் தினத்தில் இருந்து திருமுறை முற்றோதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருமுறை முற்றோதல் நிகழ்வு தினமும் பிற்பகல் 4 மணிமுதல் 7 மணிவரை நடைபெறும் என ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.விசுவநாதன் தெரிவித்தார். (எ-161)

# 13 பெரும்பாக அலுவலர்கள் தேவை; ஆனால், 4 பேர் மட்டுமே கடமையில்!

வலி.மேற்கு,ஜன.17

யாழ். மாவட்டத்தில் ஒன்பது பெரும்பாக உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாட்டில் 13 கமநல சேவை நிலையங்கள் இருக்கின்றபொழுதிலும் நான்கு பெரும்பாக உத்தியோகத்தர்கள் மட்டுமே கடமையில் உள்ளனர் என்றும் -

கமநல சேவை நிலையங்களில் நிரந்தரமான பெரும்பாக உத்தியோகத்தர்கள் இல்லாமையினால் விவசாயிகள் உரிய நேரத்தில் தமது தேவைகளை நிறைவேற்றுவதில் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் - சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே, வெற்றிடமாகவுள்ள கமநல சேவை நிலையங்களுக்குப் பெரும்பாக உத்தியோகத்தர்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-175)

## வறிய குடும்பங்களுக்கு கூரை விரிப்பு

நவாலி,ஜன.17

'சொண்ட்' நிறுவனத்தினர் கூழாவடி மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினூடாக இப்பகுதியிலுள்ள கஷ்ட நிலையிலுள்ள 14 குடும்பங்களுக்குக் கூரை விரிப்புகளையும் பாய்களையும் வழங்கியுள்ளனர். (எ-100)

## புங்குடுதீவு கமலாம்பிகை மாணவருக்கு சீருடைத் துணி அன்பளிப்பு

புங்குடுதீவு,ஜன.17

புங்குடுதீவு, 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மாணிக்கம் முருகானந்தனின் ஞாபகார்த்தமாக அவருடைய மனைவி மாணிக்கம் சீதாலெட்சுமி புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கென ஒரு தொகுதி சீருடைத் துணிகளை அன்பளிப்புச் செய்துள்ளார். குறித்த பாடசாலையின் அதிபர் ந.இராசதுரை இதனைத் தெரிவித்தார்.

இதனால் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் பெரும் நன்மை அடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-188)



மட்டுவில் இந்து மன்றத்தின் அங்குரார்ப்பண விழா அண்மையில் மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் நடைபெற்றது.

நா.நல்லதம்பி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கலாநிதி மா.வேதநாதனு[illegible]கன் மலர்மலை அணிவித்து கௌரவிப்பதை முதலாவது படத்திலும் நிகழ்[illegible]ள்ள படத்திலும் காணலாம். (எ-204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2006இல் உங்கள் இராசி எப்படி?

## மீனம்

பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி
துணிச்சலான செயல்களை நம்பிக்கை
யுடன் செய்து வெற்றிபெறும் மீனராசி
அன்பர்களே!

புத்தாண்டில் உங்கள் ஒவ்வொரு செயலையும் நிதானத்துடனும் புத்திசாலித்தனத்துடனும் செய்வதால் சிரமங்கள் விலகி நல்வாழ்வைப் பெறமுடியும். துன்பம் தரும் விடயங்களுக்காக கவலை கொள்ளாமல் அதனை எதிர்கொண்டு வெற்றி பெறுவீர்கள். பணவரவு பெறுவதற்கு புதிய நல் வாய்ப்பு தாராளமாக உருவாகி வரும். வீடு, மனை அபிவிருத்திப் பணிகளில் விரும்பிய வகையிலான நல்மாற்றங்களை செயற்படுத்தலாம். சிலருக்கு புதிய வாகனம் வாங்கும் எண்ணம் நிறைவேறும். புத்திரர்கள் தங்கள் செயல்பாடுகளில் தாமதநடையைப் பின்பற்றும் வாய்ப்புள்ளதால் தகுந்த உற்சாகம் அவர்களை நல்வழி நடத்தும். குல உடல் நலம் சிறப்பாக திகழும் வகையில் கிரக நல்லருள் பலமாக உள்ளது.

கணவன், மனைவி ஒற்றுமை சுமுகமாக இருந்தாலும், சிறு பிரச்சினைகளால் மனஸ்தாபம் வரலாம். தந்தை வழி முன்னோர்களின் பூர்வ சொத்து அல்லது புண்ணிய பலன்கள் இதுகாலம் உங்களுக்கு உறுதுணையான நன்மையைத் தரும். சுகவாழ்க்கை முறை தெய்வப் பணியும், அறப்பணியும் செய்வது தான் என்கிற மனநிலை உங்களுக்கு உருவாகும். தொழில், வியாபாரம் ஆகியவற்றில் தகுதிக்கு மீறிய மூலதனமோ அல்லது பற்றுவகை அதிக கொள்முதலோ இல்லாமல் விற்பனைக்கு தகுந்தவாறு பார்த்துக் கொள்வது நன்மை தரும். உத்தியோகம் சார்ந்த வகையில் தனக்குள்ள நற்பெயரை தக்க வைத்துக் கொள்வதால் இருக்கும் அந்தஸ்தை பாதுகாக்க முடியும்.

மூத்த சகோதரர்கள் தங்களின் செயற்பாடுகளில் சுணக்கமான தன்மை பெற வாய்ப்பு உள்ளது. அவர்களுக்கு உங்களாலான உதவிகளைச் செய்வதால் குடும்ப முன்னேற்றமும் மனமகிழ்ச்சியும் கிடைக்கும். ஆதாய பணவரவுகள் தரும் இனங்களை அறிந்து செயற்படுவதால் முயற்சியின் தன்மைக்கேற்ப நற்பலன் கிடைக்கும். வெளியூர் தொடர்புடைய வியாபாரம் மற்றும் பணி வாய்ப்புகளை பெற்றவர்கள் வியக்கத்தகும் வகையிலான அனுகூல பலன்களை பெறுவார்கள். வாகனப் பிரயாணங்கள் பாதுகாப்பு நிறைந்தும் இனிய அனுபவம் தருவதாகவும் ஏற்படும். வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு முயற்சி செய்பவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கும். ஏற்கனவே வெளிநாட்டு பணி வாய்ப்பு பெற்றவர்கள் கூடுதல் சலுகைகள் பெற வாய்ப்பு உள்ளது.

**தொழிலதிபர்கள்:** சிமெந்து, விவசாயப் பொருள்கள், கொசுவர்த்தி, பெயின்ட், இரசாயனப் பொருள் தயாரிப்பாளர்கள் கூடுதல் உற்பத்தி செய்யும் வகையில் ஓடர்கள் கிடைக்கப்பெற்று பணவரவு பெறுவார்கள். பிறிட்ஜ், வாட்டர் ஹீட்டர், குடிநீர் சுத்திகரிப்பு சாதனம், கம்பியூட்டர், மைக்ரோ ஓவன், வீடியோ கேம் பொருள்கள், பிரிண்டிங்மை, பேப்பர், பொலித்தீன் கவர் ஆகியவற்றை உற்பத்தி செய்பவர்கள் வாடிக்கையாளர்களுக்கு கூடுதல் சலுகை கொடுத்து தொழில் உற்பத்தியை பெருக்குவார்கள். லொட்ஜ் நடத்துவோர் அரசின் புதிய சலுகைகள் கிடைக்கப் பெறுவார்கள். பணவரவு அதிகரிக்க அனுகூல வாய்ப்பு உருவாகும். வீடு, மனை, வாகன யோகம் எண்ணம்போல கிடைக்கும்.

**வியாபாரிகள்:** தங்கநகை, பித்தளை பாத்திரங்கள், வீட்டு உபயோக சாதனங்கள், பிளாஸ்ரிக் பொருள்கள் வியாபாரம் செய்பவர்கள் அபிவிருத்தி காண்பார்கள். பயிற்சிப் புத்தகங்கள், பொம்மை, வீட்டு அலங்கார பொருள்கள், சிற்பங்கள், கேசட், சி.டி., வியாபாரம் செய்பவர்கள் தங்கள் தொழிலில் புதிய வரவேற்புப் பெற்று வியாபார முன்னேற்றம் காண்பார்கள்.

மாப் பண்டங்கள், உணவுப் பண்டங்கள், பிஸ்கட், கேக், வாசனைத் திரவியங்கள், சவர்க்காரம், அலங்கார அணிகலன்கள், ஆடைகள், மோட்டார் வாகனங்கள் வியாபாரம் செய்பவர்கள் படிப்படியான தொழில் முன்னேற்றம் பெற்று மகிழ்ச்சி பெறுவார்கள். பலசரக்கு வியாபாரிகளுக்கு பொன்னான நேரம். பிறர் மனதை அறிந்து செயற்படும் தன்மை அதிகரிக்கும். வீடு, மனை, வாகன வகையில்அபிவிருத்திப் பலன் ஏற்படும்.

**பணியாளர்கள்:** அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரிபவர்கள் தங்களின் அன்றாட பணிகள் தவிர, நிர்வாகத்தால் தரப்படும் புதிய உத்தரவுகளை தகுந்த கவனமுடன் செயற்படுத்துவதால் நன்மை உண்டாகும். சக ஊழியர்கள் மிகுந்த நட்புடன் உறுதுணையாக செயற்படுவார்கள். இடமாறுதல், பணி உயர்வு போன்ற விடயங்களில் எதிர்பாராத வகையில் நற்பலன் உண்டாகும். கூட்டுத்தொழில் செய்பவர்கள் ஒருவருக்கொருவர் தொழிலை வளர்ச்சி நிலைக்கு மாற்றுவார்கள். சுயதொழில் புரிபவர்கள் தொழில் சார்ந்த புதிய நண்பர்களின் உதவியுடன் வியாபார தேவைகளை பூர்த்தி செய்வார்கள். எவரையும் மதித்து நடக்கும் மனோபாவம் உருவாகும். தகுதிக்கு மீறிய தொழில் கடன்கள் உருவாகாதபடி பார்த்துக்கொள்வதால் நன்மை உண்டாகும்.

**பெண்கள்:** பணிபுரியும் பெண்கள் கவனக்குறைவு வராதபடி நடந்து கொள்வதால் மட்டுமே சராசரி வேலைகளை சீராக செய்ய முடியும். சக ஊழியர்கள் அன்பு, நட்பு கலந்த மனப்பான்மையுடன் சகஜமாக பழகுவார்கள். பணியில் சிறப்பு பெறுவதற்காக நிர்வாகத்தால் தரப்படும் பயிற்சி முறைகளை மிகுந்த கவனமுடன் கற்றுக் கொள்ள வேண்டும். கூட்டுத்தொழில் புரியும் பெண்கள் மூலதனத்தை அதிகப்படுத்துவதை தவிர்த்து, கடின உழைப்பில் கவனம் செலுத்தினால் தான் நன்மை உண்டு. சுயதொழில் புரியும் பெண்கள் தங்களுக்கு அறிமுகமான நபர்கள் மூலம் கூடுதல் வியாபார வாய்ப்புகளை பெறுவார்கள். குடும்ப நிர்வாகம் கவனிக்கும் பெண்கள் வீட்டுக்கு தேவையான பொருளாதார வசதிகள் கிடைக்கப்பெற்று மனமகிழ்ச்சி தரும் வாழ்க்கை முறையை உருவாக்குவார்கள். புத்திரப் பேறு எதிர்பார்ப்பில் உள்ளவர்களுக்கு அனுகூல பலன் உண்டாகும். ஆடை, ஆபரணச் சேர்க்கை தகுதிக்கேற்ப கிடைக்கும்.

**மாணவர்கள்:** ஆசிரியர் பயிற்சி, சட்டப் படிப்பு, அரசு நிர்வாகம், ஆன்மீகக் கல்வி, தற்காப்பு கலை பயிற்சி, நகை வடிவமைப்பு ஆகிய பயிற்சி பெறும் மாணவர்கள் முழுக் கவனத்துடன் படித்து சிறந்த மாணவர்கள் என்ற பெருமையையும், தகுதிக்கேற்ப வேலைவாய்ப்பையும் பெறுவார்கள். விவசாயம், தோட்டக்கலை பயிற்சி, வெள்ளி நகை உற்பத்தி, ஓவியம் வரைதல், கம்பியூட்டர், வரைகலை பயிற்சி, நவீன ஆடைகள் வடிவமைப்பு, மனவள ஆலோசனை பயிற்சி, அழகுக்கலை, சமையல்கலை, இசைத்துறை, பரதநாட்டியம், பாட்டு, நடிப்பு, சுற்றுலா வழிகாட்டுதல் போன்ற பயிற்சியில் உள்ள மாணவர்கள் தங்கள் திறமைகளை ஒழுங்குபடுத்தி கவனத்துடன் படிப்பதால் முன்னேற்றகரமான நிலையைப் பெறுவார்கள். சகமாணவர்கள் நட்பு பாராட்டுவார்கள். படிப்புக்கு தேவையான பொருளாதார வசதி கிடைக்கும். தந்தை, மகன் உறவுநிலை சுமுக நிலையில் இருக்கும். சுற்றுலா வாய்ப்பு நிறைவேறும். *முற்றும்.*

## கீரிமலை கமநல பிரிவு விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் விநியோகம்

நெற்செய்கையில் தற்போது ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் வழங்கும் அரசின் திட்டத்தின் கீழ் கீரிமலை கமநல சேவைகள் நிலையப் பிரிவில் இதுவரை எழுநூற்றி நாற்பது விவசாயிகளுக்கு ரி.டி.எம். எனப்படும் உரம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

அவ்வப்பகுதி விவசாயிகள் சம்மேளங்களின் சிபார்சுக்கமைய அண்மையில் இளவாலை, பெரியவிளான், மாதகல், மாரீசன் கூடல் ஆகிய பகுதிகள் உட்பட மற்றும் பல பகுதிகளுக்கு நேரடியாக இந்த உரம் கொண்டு செல்லப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

மாகியப்பிட்டியில் இயங்கிவரும் கீரிமலை கமநல சேவைகள் நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் இதனைத் தெரிவித்தார். (எ-135)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 27 - 09 - 1934



மறைவு 18 - 12 - 2005

அமரர் நல்லையா அன்னம்மா
[ஓய்வுபெற்ற ஆசிரியை]

இன்று(17.01.2006)செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

வேலடி,கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.
(45377)

குடும்பத்தினர்.
தகவல்:
ஜெயகௌரி குமாரலிங்கம் (மகள்)



ஓராம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 1930 . 10 . 01



இறைவன் அடியில் 2005 . 01 . 28

திருமதி வைத்திலிங்கம் வள்ளிப்பிள்ளை

*ஆண்டொன்று சென்றாலும்*
*அம்மா ஆறுமோ எம் துயரம்*
*எத்தனை உறவுகள் எமைச்*
*சூழ்ந்திருந்தாலும் நித்தமும் உன் நினைவே!*

*அம்மா எம் முன்னே உன் முகம்*
*உயிரோடு ஒளிந்தும் எம் நெஞ்சம்*
*உயரவே பறக்கும் எம் வாழ்வில்*
*துயரமே தீரும் அம்மா!*

இலந்தைக்காடு,
வல்வெட்டித்துறை. (45341) (21.31.19.17)

குடும்பத்தினர்.


## மதகில் பாரிய துவாரம்; வாகனச் சாரதிகள் அவதி

நவாலி,ஜன.17

ஆனைக்கோட்டை - நவாலி பிரதான வீதியில் மூத்தநயினார் ஆலயத்திற்குச் சமீபமாக அமைந்துள்ள மதகின் நடுப்பகுதியில் பாரிய துவாரம் ஏற்பட்டுள்ளது. இதனால் மதகு விரைவில் உடைந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மதகில் துவாரம் ஏற்பட்டுள்ளதையடுத்து அவ்விடத்தில் வாகனங்களை மெதுவாகச் செலுத்த வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாகவும் -

சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் இது விடயத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் - பயணிகள் கோரியுள்ளனர்.

(எ-100)

## மதுபானசாலையினால் உபத்திரவம் எனப் புகார்

வலி.தென்மேற்கு,ஜன.17

சுன்னாகம் பிரதான வீதியில் இயங்கி வரும் மதுபானசாலையினால் அப்பகுதி மக்களுக்குப் பெரும் உபத்திரவம் ஏற்பட்டு வருவதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இரவு நேரத்தில் மது அருந்திவிட்டு இப்பகுதியில் அட்டகாசம் செய்பவர்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் கையொப்பமிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

(எ-135)


வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா,
வாதநோய்கள், வலிப்பு நோய், ரீனிசம்,
தலையிடி, தலைகால் அவியல்,
சரும நோய்கள், மாதவிடாய்க்குத்து,
மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு, மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.
*சகல வியாதிகளையும்*
*குணப்படுத்துபவர்:* (44925) (21.31.19.17)

வேலணை வைத்திய கலாநிதி
சி.இராசரத்தினம்
121,2 ஆம் குறுக்குத் தெரு,யாழ்ப்பாணம்.



33ஆம் நாள் வீட்டுக்கிருத்தியமும்
நன்றி நவிலலும்



தோற்றம் 19.08.1954
மறைவு 16.12.2005

அமரர்
கந்தசாமி நாகேந்திரராஜா
(இந்து)

*மாதம் ஒன்று மறைந்தோடிப் போனாலும்*
*அப்பா உன்திருவருள் எம் மனதைவிட்டு நீங்காது*
*பண்பின் சிகரமாய் பாசத்தின் பிறப்பிடமாய்*
*வாழ்ந்த செல்வமே! உன்*
*ஆத்மா சந்தி பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

16.12.2005 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவனின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும், தபால் தந்தி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட உறவினர்கள், நண்பர்களுக்கும், யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிகள் மற்றும் ஏனைய ஊழியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (17.01.2006) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

காரைக்கால் வீதி,
மஞ்சத்தடி, இணுவில்.

மனைவி,பிள்ளைகள்.

(45378)(32.21.19.1)



45 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 11 - 11 - 1973



மறைவு 04 - 11 - 2005

அமரர் கந்தையா சிவராசா

நினையாத நேரம் அணைந்த குலவிளக்கே
என்றும் நீங்காத நினைவலைகளுடன்
நித்தமும் தங்களை நினைவு கூர்ந்து
தங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டிநிற்கும்...

சி.தனபாலசிங்கம் குடும்பத்தினர்
(மைத்துனர்)

மீசாலை மேற்கு,
கேணியடி வீதி,மீசாலை. (45387) (21.31.19.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்டத்தில் நெற்பயிர்களில் பூச்சித்தாக்கம்

## தடுக்கும் நடைமுறை குறித்து அறிவுறுத்து

பரந்தன்,ஜன.17

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கையில், நெற்பயிர்களில் கபில நிறத்துப் பூச்சியின் தாக்கம் அதிகரித்து வருவதாக முல்லை. மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் இ.கோகிலதாஸன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விவசாயிகள் தமது நெற்பயிர்களில் கபில நிற தத்துப் பூச்சிகளின் நோய்த்தாக்கம் ஆரம்பிக்கும் காலகட்டத்திலேயே அதனை இரசாயன மருந்தான பீ.பீ.எம்.சியை ஏற்றவகையில் விசிறி கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தற்போது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இந்நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இயற்கை முறை பூச்சிக் கட்டுப்பாட்டினை மேற்கொண்டு வருகின்றது. இந்த இயற்கைக் கட்டுப்பாட்டு முறையான அரிசித் தவிட்டுடன் மண்ணெண்ணையைக் கலந்து வீசுவதன் மூலம் முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும்.

இயற்கை முறையில், ஒரு ஏக்கர் நெற்பயிருக்கு 15 கிலோ புழுங்கல் அரிசித் தவிட்டுடன் 2 லீற்றர் மண்ணெண்ணையைக் கலந்து நன்கு பிசைந்து பயிருக்குத் தண்ணீர் இறைக்கும் போது விசிறுவதன் மூலம் இலகுவாக பூச்சிகள் அழிந்துவிடும்.

மேலே குறிப்பிட்ட அளவுக்குமேல் மண்ணெண்ணையைத் தவிட்டுடன் சேர்ப்பதினால் பயிருக்குச் சேதம் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உண்டு. எனவே, பூச்சிகளின் பெருக்கத்தினை அவதானித்து அருகிலுள்ள விவசாயப் போதனாசிரியருடனோ அல்லது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதேச இணைப்பாளர்களுடனோ தொடர்பு கொண்டு அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று கேட்டுக் கொண்டார். (3-6-352)



முல்லை. மாவட்டத்தில் நடத்தப்பட்ட மாவீரர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சுப்பர் றாங் விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா வெற்றிக் கிண்ணத்தை கழகத்திடம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: புதுக்குடியிருப்புச் செய்தியாளர்).*

# புதுக்குடியிருப்பில் 350 குடும்பங்கள் தஞ்சம்

புதுக்குடியிருப்பு,ஜன.17

யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் இராணுவக் கெடுபிடிகளை அடுத்து சுமார் 350இற்கு மேற்பட்ட குடும்பங்கள் புதுக்குடியிருப்புப் பகுதியில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இடம்பெயர்ந்து வரும் குடும்பங்கள் முள்ளியவளை, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, விசுவமடு, மாங்குளம், மல்லாவி, பாண்டியன்குளம் மற்றும் துணுக்காய் ஆகிய பகுதிகளில் குடியமர்ந்து வருகின்றனர்.

புதுக்குடியிருப்புப் பகுதியில் 350 குடும்பங்களும் விசுவமடுவில் 370 குடும்பங்களும் ஒட்டுசுட்டானில் 120 குடும்பங்களும் முல்லைத்தீவில் 120 குடும்பங்களும் இவ்வாறு தற்காலிகக் கொட்டகைகளிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு வேண்டிய அவசர அடிப்படைத் தேவைகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டுவருகிறது. (3-6-353)

# கிளிநொச்சி நகரப் பகுதியில் உணவகத்துக்குச் 'சீல்'

## சுகாதாரச் சீர்கேட்டை அடுத்து

விசுவமடு,ஜன.17

கிளிநொச்சி நகரப்பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் ஒன்று தமிழீழ சுகாதார சேவைப் பிரிவினரால் 'சீல்' வைத்து மூடப்பட்டுள்ளது.

தமிழீழ சுகாதாரச் சேவைகளின் விசேட நடவடிக்கையினர் கிளிநொச்சி சந்தை, கிளிநொச்சி நகர் ஆகிய பகுதிகளிலுள்ள உணவு கையாளும் நிலையங்கள், உணவுத் தொடர்புடைய நிலையங்கள் ஆகியவற்றில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

அப்போது சுகாதாரத்திற்கு ஊறு விளைவிக்கக்கூடிய வகையில் செயற்பட்ட உணவகம் ஒன்று 'சீல்' வைத்து மூடப்பட்டதுடன், சுகாதாரப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் காணப்பட்ட உணவு கையாளும் சில நிலையங்களுக்கு அடையாளக் குற்றப்பணமும் அறவிடப்பட்டது.

அத்துடன், சந்தைப் பகுதியில் சுற்றாடல் சுகாதாரம், கழிவகற்றல், பொதுமலசலகூடச் சுகாதாரம் என்பன தொடர்பாகவும் பரிசோதனை மேற்கொண்டு அது தொடர்பான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. (3-6-402)

# ஒட்டுசுட்டான் பிரதேச மக்களுக்கு மீள்குடியமர்வு கொடுப்பனவு இல்லை

ஒட்டுசுட்டான்,ஜன.17

ஒட்டுசுட்டான் பகுதியில் மீளக் குடியர்ந்த குடும்பங்களுக்கு அதற்குரிய கொடுப்பனவு முழுமையாக வழங்கப்படவில்லை என மீளக்குடியமர்ந்த மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்குத் தமது வீடுகளைப் புனரமைக்கவும் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும் அரசினால் மீள்குடியமர்வுக் கொடுப்பனவாக ஒரு லட்சம் ரூபா வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், மக்கள் மீளக்குடியமர்ந்து நான்கு வருடங்கள் கடந்த நிலையிலும் அக் கொடுப்பனவு இதுவரை முழுமையாக வழங்கப்படவில்லை எனவும் -

இந்தக் கொடுப்பனவுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு வேறு எவ்வித உதவிகளும் அரசினால் வழங்கப்படுவதில்லை எனவும் மக்கள் மேலும் தெரிவித்தனர். (3-6-341)

# நடமாடும் பற்சிகிச்சை முகாமில் டிசெம்பரில் 632 பேருக்குச் சிகிச்சை

கிளிநொச்சி,ஜன.17

வன்னிப் பகுதியில் தமிழீழ சுகாதார சேவைகளின் பிரிவினரால் நடத்தப்பட்ட நடமாடும் பற்சிகிச்சை முகாமில் கடந்த மாதம் 632 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் எனத் தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப் பணியகத்தால் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழ சுகாதார சேவைகளின் நடமாடும் பற்சுகாதாரப் பிரிவினரால் மருத்துவ வசதிகளற்றதும் மிகவும் பின்தங்கியதுமான கிராமங்களை இனங்கண்டு, அம்மக்கள் மத்தியில் காணப்பட்ட வாய்ப்புற்றுநோய், பற்சூத்தை, பற்சுகாதாரம் என்பன தொடர்பான நோய்களுக்கு பற்சுகாதார சேவையினரால் சிகிச்சை வழங்கப்பட்டது.

அந்தவகையில், கடந்த டிசெம்பர் மாதம் மட்டும் 632 பேர் இந்த நடமாடும் மருத்துவ சேவையின் மூலம் பயன்பெற்றுள்ளனர்.

டிசெம்பர் 4ஆம் திகதி காந்தி நிலையத்தில் இடம்பெற்ற சிகிச்சை முகாமில் 131 பேரும் 5ஆம் திகதி கோட்டை கட்டிய பாடசாலையில் 85பேரும் 7ஆம் திகதி கரியாலை நாகபடுவானில் 72 பேரும் 10ஆம் திகதி மன்னார் பள்ளமடு வைத்தியசாலையில் 118பேரும் 11ஆம் திகதி வெள்ளாங்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 33 பேரும்-

17ஆம் திகதி பளை மாசார் பாடசாலையில் 43 பேரும் 19ஆம் திகதி கற்சிலைமடு திலீபன் மருத்துவமனையில் 100 பேரும் 20ஆம் திகதி சேமமடு பாடசாலையில் 50 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர் - என்றுள்ளது. (3-6)

# முதலாம் தர மாணவர்களுக்கான கால்கோள் விழா வியாழனன்று

முழங்காவில்,ஜன.17

வன்னிப் பாடசாலைகளில் முதலாம் தர மாணவர்களுக்கான கால்கோள்விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

வேரவில் இந்து மகாவித்தியாலயத்தின் கால்கோள்விழா அன்றைய தினம் முற்பகல் 9 மணிக்கு பாடசாலை அதிபர் எஸ்.ரி.இளங்குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் தரம் 1 மாணவர்களுக்கான வரவேற்பு விழாவும் பொங்கல் விழாவும் நடைபெறும். கிராஞ்சி அ.த.க.பாடசாலையில் வித்தியாலய அதிபர் ஐ.கேசவன் தலைமையிலும் - வலைப்பாடு றோ.க.த.க.பாடசாலையில் அதிபர் சு.செல்வரத்தினம் தலைமையிலும் இந்நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

# வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டது

பரந்தன்,ஜன.17

வட்டக்கச்சிப் பகுதியிலுள்ள வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையைத் தமிழீழ சுகாதார சேவையினர் துரித மாக மேற்கொண்டு வருகின்றனர்.

வட்டக்கச்சி சிவிக் சென்ரர், ஆறுமுகம் வீதி, கட்சன் வீதி ஆகிய பகுதிகளிலுள்ள வளர்ப்பு நாய்களுக்குக் கடந்த 8ஆம் திகதி தடுப்பூசி ஏற்றப்பட்டது. தடுப்பூசி ஏற்றப்பட்ட வளர்ப்பு நாய்களை உரியவர்களைக் கட்டி வளர்க்குமாறும் ஏனைய கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்கள் தமிழீழ சுகாதார சேவைப் பிரிவினரால் பிடித்து அழிக்கப்படும் எனவும் மக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. (3-6-352)

# கண்டாவளையில் 9 கிராமங்கள் அபிவிருத்திக்குத் தெரிவு

பரந்தன், ஜன-17

வடக்கு - கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கண்டாவளை மற்றும் பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

அந்த அடிப்படையில் கண்டாவளையில் 9 கிராமங்களும் பச்சிலைப்பள்ளியில் ஒரு கிராமமும் இதற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இந்தக் கிராமங்களின் தேவைகளைப் பகுப்பாய்வு செய்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

கண்டாவளை மகாவித்தியாலயத்தில் உதவி அரசாங்க அதிபர் சி.சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட செயலகத் திட்டப் பணிப்பாளர் மு.தயாகுணரட்ணசிங்கம், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த சி.மகிந்தன், அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.கேதீஸ்வரன், கிராம உத்தியோகத்தர் இ.சண்முகநாதன் மற்றும் பாடசாலை அதிபர் சிறிதரன் ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

மக்களும் கலந்து கொண்டு எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாகத் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். (3-6-352)



பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வலைப்பாட்டில் புனித அன்னம்மாள் முன்பள்ளிக் கட்டடத்திற்கான அடிக்கல் அண்மையில் நடப்பட்டது.

சர்வதேச தமிழர் புனர்வாழ்வுக் கழக பொறியியலாளர் சிவராஜசிங்கம் அடிக்கல் நடுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்:வெள்ளாங்குளம் செய்தியாளர்).*

# வன்னிப் பாடசாலைகளுக்கு இதுவரை பாடநூல்கள் இல்லை

முழங்காவில்,ஜன.17

வன்னிப் பாடசாலைகளுக்கு இலவசப் பாடநூல்கள் இதுவரை கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தரம் 1 முதல் தரம் 11 வரையான சகல வகுப்பு மாணவர்களுக்குமான இலவச பாடநூல்கள் கல்வித் திணைக்களத்திற்கு வந்து சேரவில்லை எனவும் - அதனால்தான் பாடசாலைகளுக்கு அவை வழங்கப்படவில்லை என்றும் கூறப்பட்டது.

அதேநேரம் தரம் 8 மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டத்திற்குரிய பாடநூல்களும் இதுவரை வழங்கப்படவில்லை.

அரசினால் வழங்கப்படும் இந்த இலவசப் பாடநூல்கள் வருடாவருடம் காலம் தாழ்த்தியே கிடைப்பதால் பிள்ளைகளின் கல்வியில் பாதிப்பு ஏற்படுவதாகப் பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (3-6-323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

SISIL - 80 குளிர்சாதனப் பெட்டி, CEYAMA 2" Self Prime, 1 H.P. தண்ணீர் பம், வீணை, 10 மாத சிவப்பு பேட்டுக்கோழிகள் 70, 3மாத பேட்டுக்குஞ்சுகள் 100, Singer தையல் மெசின் என்பன உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 489, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் T.P.No.: 0777592649. (45400)

## வீடு வாடகைக்கு

இல.180, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் மூன்று அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: மேற்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். T.P.: 0773564362 (45399)


கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட நினைவு மலர் கவர் படங்கள் கூல் லெமனேசன் செய்து பெற்றுக்கொள்ள,
**ஸ்ரீபதி நேரச்சகம்**
604 K.K.S வீதி, யாழ்ப்பாணம்.



**Walk - In - Interview**
**Hardware Engineers/ Technicians/Trainees**
*Both Female & Male candidate can Walk-in on 18/01/2006 (Wednesday) from 10 am to 5 pm. Attractive salary + perks will be given*
**UNIT**
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.


## முன்பள்ளிக் கட்டடத்தை விஸ்தரிக்க நிதியுதவி

வலி.தென்மேற்கு,ஜன.17

சிறுவர் பாதுகாப்பு நிதியம் நவாலியிலுள்ள புலவர் இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாமிலுள்ள முன்பள்ளிக் கட்டடத்தை விஸ்தரிப்பதற்கும் -

அங்கு மலசலகூடம் ஒன்றை புதிதாக நிறுவுவதற்கென இரண்டு லட்சத்து 32 ஆயிரத்து 827 ரூபா நிதியினை வழங்கியுள்ளது.

இவற்றுக்கான கட்டட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று வலி. தென்மேற்கு பிரதேச செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

இதற்கான நிதி பிரதேச செயலகத்திற்குக் கிடைத்துள்ளது என்று - தெரிவிக்கப்பட்டது.

(எ-135)

## மரம் அரிந்தபோது அவலம்; இரண்டு விரல்களை இழந்த இளைஞன்

நவாலி,ஜன.17

மரம் அரியும் இயந்திரத்தில் பணிபுரிந்த இளைஞன் அந்த இயந்திரத்தில் சிக்குண்டு தனது வலதுகையின் விரல்கள் இரண்டை இழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வட்டுக்கோட்டையில் இடம்பெற்றுள்ளது. இதில் கோவிந்தசாமி சுதன் (வயது-20) என்பவரே காயமடைந்தவராவார்.

தற்போது இவர் சிகிச்சைக்காக யாழ். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(எ-100)

# திருமண அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் தை மாதம் நாளை (18.01.2006) புதன்கிழமை முற்பகல் 9.20 - 10.20 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

| எமது ஏக புதல்வன் திருவளர் செல்வன் | எமது கனிஷ்ட புத்திரி திருவளர் செல்வி |
|---|---|
| **ஹரிகரன்(ஹரன்)** | **கௌசலாதேவி(கௌசி)** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறைவன் திருவருள் துணைகொண்டு ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் நடைபெற உள்ளது. அவ்வேளை தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*வரவேற்புபசாரம் : 19.01.2006 வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.*

| | |
|---|---|
| திரு. கு.சிவபாலசுந்தரம் | திரு. திருமதி இரத்தினம் |
| பங்களாவடி, கே.கே.எஸ். வீதி, மல்லாகம். | ஆவரங்கால் மேற்கு, புத்தூர். |

(45320)


**UNIT**

எமது 1வது ஆண்டு நிறைவு, புதுவருடம் மற்றும் தைப்பொங்கலை முன்னிட்டு

**Ultimate Offer**

Printer/Scanner/Table/USB Flash/
TV Tuner/Home Theater Woofer/UPS with Screen Filter,
Dust Cover, Mouse Pad & CD Cleaner
Are Totally Free

எவ்வளவோ போட்டிகள் மற்றும் பொறாமைகளுக்கும் முகங்கொடுத்து வளர்ந்துள்ளோம். பழைய பொருட்களென்றார்கள், விரைவில் மூடி விடுவார்கள் என்றார்கள். எல்லாம் புஸித்துப் போய்விட்டது. சொன்னவர்கள் எல்லோரும் போற்றும் வண்ணம் வளர்ந்துள்ளோம்.

**எப்படி இவ்வளவு ஆக்கங்கள் எங்களால் செயற்படுத்தப்படுகின்றது?**

- இந்திய பொறியியல் துறையில் (Electronics & Communication) சிறப்புத்தேர்ச்சி
- இரு தசாப்தகால (20 வருடங்கள்) பட்டறிவு (Experience) அதன்மூலம் எதையும் செய்யக்கூடிய தேர்ச்சிகள்.
- இந்திய முன்னணி நிறுவனங்களான infosys, Satyam, pentafour, Aram Ltd. UNIT போன்ற நிறுவனங்களில் பணியாற்றிய புலமை. இதன்மூலம் இணைந்து இயங்கும் அமைதி.
- உலக முன்னணி நிறுவனங்களான Microsoft, Intel,IBM, Compaq, Toshiba, Sun Micro systems (Java), Hp, Red Hat, Cisco & Linksys நிறுவனங்களுடன் Hardware, Networking மற்றும் Software துறைகளில் இணைத் தயாரிப்பில் ஈடுபட்ட அனுபவ முதிர்ச்சி.
- இன்னும் பல...

IBM World Leading Branded Systems @ Offer Price

Attractive Woofers & Home Theatres 10% Discount

புதிய P4 கணனிகள் 3 வருட முழு உத்தரவாதத்துடன் கொழும்பை ஒத்த விலைக்கே



சகல கணனிசார் உதிரிகளும் சலுகை விலையில்



Hurry
இச்சலுகை குறிப்பிட்ட சில தினங்கள் மட்டுமே

தாயக மின்சார நிலைமைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்டவை

இது எங்கள் மொபைல் சர்வீஸ் ரீமுடன் இணைக்கப்பட்டது.

An Indian Qualified Engineer's Workshop

**Possible which Impossible**

347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021- 4590720 / 0773134737



காலத்தின் தேவையறிந்து புதியதை அறிமுகம் செய்யும் சி.ஐ.சி இல்லத்தில் இருந்து உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு புதியதோர் வரப்பிரசாதம் பனிப் பூச்சியை ஒரேதடவையில் கட்டுப்படுத்த




சி.ஐ.சி. இல்லம்
199, கியூவீதி,
கொழும்பு.

ஏகவிநியோகஸ்தர்கள்:
பவானி களஞ்சியம் [யாழ்., நீர்வேலி]
அம்பிகா களஞ்சியம் [வன்னி]


# மரண அறிவித்தல்

## ஐயம்பிள்ளை பூபாலசிங்கம்

*(முன்னாள் பாலவிநாயகர் றேடர்ஸ், கிளிநொச்சி)*
*(பங்காளர் - குமரன் சில்க்- கொழும்பு - 11)*



புங்குடுதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 14/6, சீனியர் லேன், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை பூபாலசிங்கம் அவர்கள் 15.01.2006 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - அன்னபூரணிப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் மருமகனும் அன்னலெட்சுமியின் அன்புக் கணவரும் மயூரன் (பிரான்ஸ்), அகிதா, தர்சிதா (யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள்), பவிராஜ் (சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நாகம்மா, சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், செல்லத்துரை), சிந்தாமணி (லண்டன்), காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை, வைத்திலிங்கம், இராசேந்திரம் மற்றும் குமரையா (கொழும்பு), குணமாலை (கொழும்பு), சாந்தலிங்கம் (சுவிஸ்), சிவராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சந்திராதேவி (காந்தி), சாரதாமணி (கனடா), யோகமலர் (சுவிஸ்), தேன்மொழி (கனடா), காலஞ்சென்ற தர்மசீலன், மாலினி (கனடா), நிமலராணி (சுவிஸ்), தேவரஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற நாகநாதன், மகேஸ்வரி, சிவஞானம், அங்கையற்கண்ணி, பரமேஸ்வரி (கனடா), அன்னலட்சுமி (கொழும்பு), நாகம்மா (கொழும்பு), ரதிதேவி (கொழும்பு), விஜயலட்சுமி (சுவிஸ்), விஜயலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சோமசுந்தரம், சண்முகசுந்தரம் (கனடா), சிவசூரியதாஸ் (சுவிஸ்), ரஜீவன் (சுவிஸ்),மேகவர்ணன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**14/6, சீனியர் லேன், யாழ்ப்பாணம்.** (45357)(32.11.17.24)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

## வீதி பலத்த சேதம்

குருநகர்,ஜன.17

யாழ். ஆஸ்பத்திரி வீதி - முதலாம் குறுக்கு வீதி சந்திப் பகுதியில் வீதி சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

இதனால் இவ் வீதியூடாகப் பயணிப்போர் மிகுந்த சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

## விவசாய சம்மேளனக் கூட்டத்தை நடத்த ஆணையாளர் ஏற்பாடு

வட்டுக்கோட்டை - சங்கரத்தை விவசாய சம்மேளனத்தின் பொதுக்கூட்டத்தை நடத்த யாழ் மாவட்ட கமநல திணைக்களத்தின் உதவி ஆணையாளர் எஸ்.சுந்தரேசன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கடந்த எட்டு வருடங்களாக செயற்படாமல் இருந்த வட்டு-சங்கரத்தை விவசாய சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் அடுத்த மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி சம்மேளனம் வட்டு.வடக்கு, வட்டு.கிழக்கு, வட்டு.மேற்கு, வட்டு.தெற்கு, வட்டு.தென்மேற்கு, சங்கரத்தை ஆகிய ஆறு கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியது என்பது தெரிந்ததே.

இரண்டு கிராம அலுவலர் பிரிவுக்கு ஒரு விவசாய சம்மேளனத்தை அமைப்பதற்கும் உதவி ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கூறப்பட்டது

(எ-175)

## 7ஆம் ஆண்டு நீங்காத நினைவுகளில்...

| தாயின் மடியில் | | தாயக மடியில் | தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|---|---|---|
| 18 - 12 - 1976 |  | 08 - 11 - 1998 | 28 - 08 - 1978 |  | 17 - 01 - 1999 |

| நாட்டுப்பற்றாளர் | கப்டன் மித்திரன் |
|---|---|
| **சின்னையா சிவதாசன்** | **சின்னையா சிவஜீவன்** |

*ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் ஆறாது நம் துயரம்*
*அடி நெஞ்சில் என்றும் உம் நாமம்*
*உச்சரித்து வாழ்ந்திருக்கின்றோம்.*

சொந்த முகவரி:
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:
575, கோக்காவில் வீதி,
துணுக்காய்.

சகோதரி
ஜெயநிதி சிவானந்தன் (ஆசிரியர்)
(மு/தேறாங்கண்டல் தமிழ் வித்தி.)
குடும்பத்தினரும்.

(சி/47370)(32.11.17.24)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அமெரிக்கக் ஹெலி சுட்டு வீழ்த்தப்பட்டது

## பக்தாத்தில் சம்பவம்; விமானிகள் கதி தெரியாது!

பக்தாத்,ஜன.17

ஈராக் தலைநகர் பக்தாத்தில் அமெரிக்கக் ஹெலி ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. ரொக்கெட் ஒன்றால் அது சுடப்பட்டது என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர் என 'ரொய்ட்டர்' செய்தி முகவரகம் தெரிவித்தது.

அந்த ஹெலியில் பயணித்த இரண்டு விமானிகளைப் பற்றியும் எந்த தகவலும் இல்லை என அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதைப்பற்றிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சம்பவம் உள்ளூர் நேரப்படி காலை 8.20 மணிக்கு இடம்பெற்றதாகவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வெள்ளியன்றும் ஹெலி ஒன்று ஈராக்கிய வடக்கு நகரான மொசூல் பகுதியில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது. அதன் விமானிகள் இருவரும் அந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டனர்.

இந்த மாதத்தின் தொடக்கத்தில் அமெரிக்க பிளக் ஹக் ரக ஹெலி ஒன்றும் ஈராக்கில் விபத்துக்குள்ளாகி இருந்தது. வடக்கு ஈராக் பகுதியில் உள்ள தலாபார் பகுதியில் அது வீழ்ந்து நொறுங்கி இருந்தது. அதில் பயணித்த 8 பயணிகளும் 4 விமானப்படையினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று இடம்பெற்ற விமான விபத்து பக்தாத்திற்கு அருகில் உள்ள மிஸக்டா எனும் நகரிற்கு அண்மையிலேயே இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் இதைப் பற்றிக் கருத்துத்தெரிவிக்கையில் விமானத்தின் ஒரு பகுதியில் இருந்து புகை கிளம்பியதாகவும் அது கீழே இருந்து சீறிச் சென்ற ஒரு பொருள் மோதியதாலேயே அப்புகை எழுந்தது என்றும் கூறினார்.

(க)

# தற்கொலைத் தாக்குதலில் கனேடிய ராஜதந்திரி பலி!

## ஆப்கானிஸ்தானில் சம்பவம்

தற்கொலைக் குண்டுதாரி எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் ஆப்கானிஸ்தானில் நடத்திய தாக்குதலில் கனேடிய ராஜதந்திரி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். தெற்கு நகரான கந்தகாரில் நேற்றுமுன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இறந்தவர் 59 வயதான கிளெபின் பெரி என கனேடிய அரசு அறிவித்துள்ளது. ஆப்கானிஸ்தானில் செயற்பட்டுவரும் கனேடிய புனர் நிர்மாணக் குழுவின் அரசியல் பிரிவுத் தலைவராக அவர் செயற்பட்டு வந்தார்.

சன நெருக்கம் நிறைந்த பஸ் தரிப்பிடம் ஒன்றிற்கு சமீபமாக நடந்த இந்தத் தாக்குதலில் ராஜதந்திரியின் உயிர் பறிக்கப்பட்டது. அவரது அருகில் நின்ற வேறு இருவரும் கூட இச்சம்பவத்தில் உயிரிழந்தனர்; மேலும் இரு கனேடியப் படை வீரர்கள் உட்பட 13 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலை ஒரு "துன்பியல் சம்பவம்" என்று கனேடிய பிரதமர் போல் மார்டின் தெரிவித்துள்ளார். "காயமடைந்த வர்களினதும் இறந்தவர்களினதும் குடும்பங்களிற்கும் எமது அனுதாபங்களையும் ஆதரவையும் பிரார்த்தனைகளையும் ஒவ்வொரு கனேடியர்கள் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்" - என்றும் அவர் கேட்டுள்ளார்.

கனேடிய வாகனத் தொடரணி தமது முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருக்கை யிலேயே தாக்குதலுக்கு இலக்கானது என்று கூறப்படுகின்றது.

தாக்குதலுக்கு இலக்கான தொடரணியில் இருந்த கார் சாரதி ஒருவர் தெரிவிக்கையில்:-

பெரும் வெடிச்சத்தம் ஒன்றைக் கேட்டார் எனவும் அருகில் இருந்த கட்டடங்களின் கண்ணாடிகள் கிடுகிடுவென ஆடின எனவும் கூறினார்.

"சில படையினர் கீழே வீழ்ந்து கிடந்ததை நான் கண்டேன். ஏராளமான பொதுமக்கள் 'ஸ்ரெச்சர்களில்' எடுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தார்கள்" - என்றார் அவர்.

தாக்குதலுக்கு இலக்காண வாகனம் வீதியில் தலைகீழாகக் கவிழந்து கிடந்தது.

(க)

# ஈரானின் அணு ஆய்வு குறித்து முக்கிய மேற்கு நாடுகள் ஆராய்வு

## சாத்தியமான தடைகள் குறித்தும் பரிசீலனை

லண்டன்,ஜன. 17

ஈரான் தனது அணு ஆய்வுத் திட்டங்களை மீண்டும் செயற்படுத்த ஆரம்பித்திருப்பது குறித்து உலகின் சக்திவாய்ந்த நாடுகள் லண்டனில் கூடி ஆராய்ந்து வருகின்றன.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா, ஜேர்மனி ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

ஈரானின் நகர்வுக்குப் பதிலாகத் தாம் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் பற்றி அவர்கள் இந்தக் கூட்டத்தில் ஆராய்ந்து வருகின்றனர். இராஜிய ரீதியாக மேற்கொள்ளப்படக் கூடிய விடயங்கள் குறித்தும் தீவிரமாக ஆராயப்படுகின்றது. அதில், சாத்தியமான தடைகள் பற்றியும் சிந்திக்கப்படும்.

அதேசமயத்தில், ஈரானின் அணு ஆய்வுத் திட்டம் அந்த நாடு கூறுவதுபோன்று அமைதி வழிமுறைக்கானதாக இருக்கும் என்று உறுதிப்படுத்த முடியாது என்று ஐ.நாவின் அணுக் கண்காணிப்பு அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இனிமேல் தமது அணு உலைகளை ஐ.நா. கண்காணிப்பாளர்கள் சோதனையிடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று முன்னதாக, ஈரான் தெரிவித்திருந்தது.

இந்த விடயத்தில் இராணுவப் பலத்தைப் பயன்படுத்தாமல் இருப்பதற்கான அமெரிக்க அதிபரின் திட்டத்தை அந்த நாட்டின் இரு பிரதான கட்சிகளின் அரசியல்வாதிகளும் ஆதரித்துள்ளனர்.

தாக்குதல் என்பது எப்போதும் கடைசியான முயற்சியாகவே இருக்கவேண்டும் என்று குடியரசுக் கட்சியின் மூத்த செனட்டரான ஜோன் மக்கெய்ன் தெரிவித்தார். அனைத்து முயற்சிகளும் சாத்தியமற்றுப் போகும் நிலையிலேயே இராணுவப் பலம் பற்றிக் கவனத்திலெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் பற்றிக் கருத்துத் தெரிவித்த ஜனநாயகக் கட்சி செனட்டர் இவான் பாஜ் தெரிவிக்கையில், ஈரான் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நிலை ஏற்படும் வரைக்குமாவது இராணுப் பலப் பிரயோகம் தாமதிக்கப்படவேண்டும் என்று தெரிவித்தார்.

தாம் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யப் போவதாக வெளியாகும் தகவல்கள் அனைத்தையும் ஈரான் அடியோடு நிராகரிக்கின்றது. அதே சமயம் தம் மீது தடைகள் விதிக்கப்படுமானால் அது எண்ணெய் விலை அதிகரிப்புக்கு வழிகோலும் என்றும் அந்த நாடு எச்சரித்துள்ளது.

இந்த விடயத்தைத் தணிவுக்குக் கொண்டு வருவதற்கு மிரட்டல் இல்லாத ராஜதந்திர வழிமுறைகள் மட்டுமே பயனளிக்கத்தக்கவை என்று ஈரானிய அதிகாரிகள் கூறினர்.

இதேவேளை, அணு ஆயுதங்களால் யாருக்கும் பயன்கள் ஏற்படப் போவதில்லை என்று கூறியிருக்கும் சவூதி வெளிவிவகார அமைச்சர் இளவரசர் சவூட் அல்-பைசல், வளைகுடா அணு ஆயுதமற்ற பிராந்தியமாக இருக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார். பி.பி.ஸிக்கு அளித்த செவ்வி ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

(க)

## உலக அரங்கில்

### ஏரியல் ஷெரோன் கண்விழித்தார்!

ஜெருசலேம், ன. 17

பக்கவாத நோயினால் கடுமைய கப் பாதிக்கப்பட்டு படுக்கையில் இருக்கும் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் நேற்று முதற்றடவையாகக் கண்விழித்துப் பார்த்தார் என்று பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசிவுப் பாதிப்பை அடுத்து அவர் செயற்கைக் கோமா நிலையில் வைத்தியர்களால் பராமரிக்கப்பட்டார். சில நாள்களின் முன்னரே அவரை அதிலிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(க)



ஐரோப்பிய பனிச் சறுக்குச் சம்பியன்ஷிப் போட்டிகள் பிரான்ஸ் நாட்டின் லேயோன் நகரில் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதற்காக அந்த நாட்டைச் சேர்ந்த பனிச்சறுக்கு நடனக் காரர்களான நதாலி பெச்ஹால்ற் (வலது), பபியன் பொஸாட் ஆகியோர் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

# இந்தோனேஷியா, துருக்கியில் பறவைக் காய்ச்சல் பரவுகிறது!

ஜகார்த்தா,ஜன17

பறவைக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இந்தோனேஷியா சிறுமி ஒருவர் கடந்த சனிக்கிழமை பலியாகியுள்ளார். துருக்கியில் இறந்த சிறுமி ஒருத்திக்கும் இந்நோய் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

உலக சுகாதார ஸ்தாபனத்தால் மேற்கொள்ளப்படும் ஆரம்பகட்ட சோதனைகளின்படி இந்தோனேஷியச் சிறுமிக்குப் பறவைக் காய்ச்சல் நோய் பீடித்திருந்தது உறுதிசெய்யப்பட்டால் அவருடன் சேர்த்து இதுவரை அந்த நாட்டில் இந்நோயால் பீடிக்கப்பட்டு பலியாகியோர் எண்ணிக்கை 13 ஆக அதிகரிக்கும்.

இறந்த பெண்ணுடைய குடும்பத்தைச் சேர்ந்த மேலும் இருவர் நோய்வாய்ப்பட்டு இருந்தபோதும் அவர்கள் பறவைக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருக்கிறார்களா எனும் சோதனைக்கு உட்படுத்தப்படவில்லை.

டிசம்பர் 2003 இல் இருந்து இன்றுவரை ஆசிய பிராந்தியத்தில் பறவைக் காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்டு பலியாகியோர் எண்ணிக்கை 76 ஐ தாண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பல லட்சக் கணக்கான கோழிகளும் வாத்துகளும் இந்நோய்யின் தாக்கத்தினால் இறந்துள்ளன அல்லது கொல்லப்பட்டுள்ளன.

ஆசிய நாடுகளுக்கு வெளியே துருக்கியிலும் இந்நோய் பரவி வருவது குறிப்பிடத்தக்கது. அங்கு சமீபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 சிறுவர்கள் பலியாகியிருந்தனர். நேற்றுமுன்தினம் 15 வயதுடைய மற்றுமொரு சிறுமி இந்நோயால் பாதிக்கப்பட்டு மரணமானார் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

பற்மா ஒசான் என்ற பெயருடைய இந்தச் சிறுமி கிழக்கு நகரான வான் என்ற இடத்தில் உள்ள மருத்துவமனை ஒன்றிலேயே அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் அவரிற்கு இந்நோய் பீடித் திருந்ததை வைத்தியர்கள் உறுதிசெய்யவில்லை. ஆனால், பற்மாவினது சகோதரன் இந்நோய்க்கான வைரஸினால் பீடிக்கப்பட்டது உறுதிசெய்யப்பட்டுள்ளது. துருக்கியில் பறவைக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 19 ஆவது நபராக இவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

(க)




# புலிகளைக் கணக்கிடும் பணிகள் இந்தியாவில் ஆரம்பித்து வைப்பு

புதுடில்லி,ஜன.17

அழிந்துவரும் புலிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான தமது நீண்ட காலத்திட்டத்தை இந்திய அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர். அதற்காக நாடுபூராகவும் உள்ள தேசியப் பூங்காக்களில் வாழும் புலிகளைக் கணக்கெடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அளவீடுகளை மேற்கொள்ளும் அதிகாரிகளும் அவர்களுக்கு உதவியாகத் தொண்டர்களும் பணியில் இறக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கணக்கெடுப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளால், இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதற்கான காரணங்கள் கண்டறியப்படுவதுடன் அவற்றை நிவர்த்திக்க வழிகளும் கண்டறியப்படும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

தற்போது மேற்கொள்ளப்படும் கணக்கெடுப்பின் போது புலிகளின் விவரங்கள் படங்களுடன் மத்திய நிலையம் ஒன்றில் சேகரிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

100 ஆண்டுகளிற்கு முன்னர் இந்தியாவில் 40,000 புலிகள் இருந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், இப்போது அவை 3,500ஆக அருகிவிட்டன என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

உலகில் அழிந்துவரும் மிருகங்களில் வரிசையில் புலிகளும் யுனெஸ்கோ அமைப்பால் சேர்க்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அவற்றைப் பாதுகாப்பதற்கான திட்டங்கள் நீண்டகாலமாகத் தயாரிக்கப்பட்டு வந்த நிலையில் இப்போதே அவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. சாதாரண தர தகுதியுடன் உயர் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை வழங்கும் எம்.டி.ஐ.எஸ்.நிறுவனம்

1956ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சிங்கப்பூர் முகாமைத்துவ மேம்பாட்டு நிறுவனம் (எம்.டி.ஐ.எஸ்) உயர் கல்வித்துறையில் முனைப்பான அனுபவ பின்புலத்துடன் செயற்பட்டுவரும் பழைமையும் இலாப நோக்க மற்றதுமான ஓர் அமைப்பாகும். இப்பொழுது இலங்கை மாணவர்களுக்கும் அதே வசதி வாய்ப்புகளை வழங்க முன்வந்துள்ளது.

ஜி.சீ.ஈ சாதாரணதர குறைந்தபட்ச கல்வித் தகுதியுள்ள இலங்கை மாணவர்களுக்கும் சிறப்பான சேவையை வழங்கும் நோக்குடன்




இலங்கையில் ஆறு மாதங்களுக்குமுன் இத்திட்ட செயற்பாடுகள் தொடங்கப்பெற்றன. இந்நிறுவனத்தின் மூலம் கல்வியைத் தொடர்பவர்களுக்கு ஐக்கிய இராஜ்யம், ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் ஏற்படும் செலவில் மூன்றில் ஒரு பங்கு (1/ 3) செலவே ஏற்படும் என்று தெரியவந்துள்ளது.

இன்றைய கால தேவைகளை நிவர்த்தி செய்யும்வகையில் தகுதிவாய்ந்த பட்டதாரிகளை உருவாக்க இந்நிறுவனம் முயற்சி எடுக்கின்றது. இந்தவகையில் டிப்ளோமா பட்டப் படிப்பு மற்றும் பட்டபின்படிப்பு பாடநெறிகளை முன்னெடுக்க எம்.டி.ஐ.எஸ். நடவடிக்கை எடுத்துள்ளது. தொழில்துறை, மக்கள் தொடர்பாடல், உயிரியல் விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறைகளில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற தகுதிகளை ஏற்படுத்திக்கொள்ளும் வகையிலான வழிகாட்டல்களை இந்நிறுவனம் வழங்குகிறது.

உயர் கல்விக்கு பேர்போன பிராட்போர்ட் பல்கலைக்கழகம், ஐக்கிய இராஜ்யத்தில் வேல்ஸ் பல்கலைக்கழகம், எடித்கோவன் பல்கலைக்கழகம், மக்கயர் பல்கலைக்கழகம் மற்றும் ஆஸ்ரேலியாவின் சவுதேர்ன் குரொஸ் பல்கலைக்கழகம், ஒக்லஹோமா பல்கலைக்கழகம், அமெரிக்காவின் ஒட்டாவா பல்கலைக்கழகம், பிரான்ஸில் கிரேனொயின் எகோல்டி முகாமைத்துவம் போன்ற கல்விப் பீடங்களின் அங்கீகாரத்தையும் மதிப்பையும் இந்நிறுவனம் தனது நீண்ட கால சேவைக்காகப் பெற்றுக்கொண்டுள்ளது.

தற்பொழுது 8000 பன்நாட்டு மாணவர்கள் 'எம்.டி.ஐ.எஸ்' நிறுவனத்து டன் தமது மேற்கல்வியை இணைத்துக் கொண்டுள்ளார்கள். சிங்கப்பூரில் ரயில்வே போக்குவரத்து உட்பட சகல வசதிகளும் கொண்ட ஒரு முக்கியமான இடத்தில் அதன் தலைமை நிலையம் அமைந்துள்ளது.

'எம்.டி.ஐ.எஸ்' சிங்கப்பூரிலுள்ள தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களில் ஒன்று. 3 ஹெக் டெயர் காணியில் அதன் தனிவளாகம் அமைந் துள்ளது. 100 வகுப்பறைகள், நான்கு உயிரியல் மருத்துவ ஆய்வு கூடங்கள், கணனி ஆய்வு கூடங்கள், மக்கள் தொடர்பாடல் கலைக் கூடங்கள், புத்தகசாலை, சிற்றுண்டிச்சாலை, பயிற்சி அறைகள், ஆயிரக்கணக்கான நூல்கள் கொண்ட நூலகம் மற்றும் தரவுக்கான பொருள்கள் போன்ற வசதிகள் உண்டு.

தற்போது எம்.டி.ஐ.எஸ் நிறுவனத்தில் வர்த்தக முகாமைத்துவத் துறையில் தமது பட்டப்படிப்பை மேற்கொண்டுவரும் சட்டத் துறைப் பட்டதாரியும் இலங்கையருமான மகேந்திரா டயஸ், எம்.டி.ஐ.எஸ் நிறு வனம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்-

இந்த நிறுவனம் இலகு கட்டண நடைமுறையில் விரிவான முகாமைத்துவப் பாடநெறிகளை வழங்கி வருவதாகத் தெரிவித்தார். அதுவுமன்றி, உலகில் பொருளாதாரத்துறையில் முக்கிய இடம் வகிக்கும் நாடுகளில் இரண்டாவது இடம் வகிக்கும் சிங்கப்பூர் ஆசிய வர்த்தக சந்தையில் பிரவேசிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

விரிவுரையாளராக 27வருடகால அனுபவம் கொண்ட சிங்கப்பூர் பிரஜையான எஸ்.கே.தாஸ், **(C.ENG., MIEE )** இலவச ஆலோசனை வழங்கும் பொருட்டு தற்போது இலங்கையில் தங்கியுள்ளார். ஏனைய நாடுகளைப் போலல்லாது குறிப்பிட்ட துறையொன்றில் பட்டம் பெறும் ஒருவர் அதே துறையில் தொழில்வாய்ப்பொன்றினைப் பெறுவதற்குச் சிங்கப்பூர் அரசு கட்டுப்பாடு எதனையும் விதிப்பதில்லை. குறிப்பிட்ட துறையொன்றில் தகுதிபெறுவோர் அதே துறையில் பொருத்தமான தொழில் வாய்ப்பொன்றினைப் பெற்று, சிங்கப்பூரிலேயே தங்கி விடுவதை சிங்கப்பூர் அரசு வரவேற்கிறது என்றும் எஸ்.கே. தாஸ் தெரிவித்தார்.

எம்.டி.ஐ.எஸ். நிறுவனம் உலக அங்கீகாரம் பெற்ற நிறுவனம். கல்வி பயில விரும்பும் மாணவர்களுக்கு சிறந்த வாய்ப்பை வழங்கி நின்று, அவர்களின் எதிர்கால சுபீட்சத்துக்கு உதவுகின்றது. மேலதிக விவரங்களுக்கு 4925664 ஹொட்லைன் இலக்கத்தில் தொடர்புகொள்ளலாம்.

இந்த நிறுவனத்தின் கண்காட்சி எதிர்வரும் 20ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்திலும் -

எதிர்வரும் 24ஆம் திகதி முதல் இரு தினங்கள் கண்டியில் குயின்ஸ் ஹோட்டலிலும்- நடைபெறவிருக்கிறது (ப-3)

## பண்ணையாளருக்கு சுழற்சி முறைக்கடன்

வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் பண்ணையாளர்களுக்கு சுழற்சி முறைக்கடன் வழங்கப்பட்டு வருகின்றது.

கால்நடை வளர்ப்பில் ஈடுபடுகின்ற வருமானம் குறைந்த பண்ணையாளர்களுக்கு சுழற்சி முறையில் ரூபா பத்தாயிரம் கடனாக வழங்கப்பட்டு வருகின்றது. இக்கடனைப் பெற விரும்புவோர் சங்க காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்க முடியும் என சங்கத் தலைவர் தெரி வித்துள்ளார். (3-161)

## சிறுவர் வாழ்வை மேம்படுத்த நிதிசேகரிக்கும் திட்டம்

யாழ்ப்பாணம், ஜன.17

உலகளாவிய ரீதியில் உள்ள சிறுவர்களது வாழ்வை மேம்படுத்தும் நோக்குடன் ரி.என்.ரி. கூரியர் சேவையினர் தமது வாடிக்கையாளர்களிடையே நிதி சேரிக்கும் திட்டமொன்றை அறிமுகம் செய்துள்ளனர்.

உலக உணவுத் திட்ட அனுசரணையுடன் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

ரி.என்.ரி. கூரியர் சேவையினர் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியுடன் இத்திட் டம் தொடர்பான விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

சிறுவர்களின் வாழ்க்கை, கல்வி என்பவற்றை மேம்படுத்தும் நோக்குடன் இந்த திட்டம் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. (3-203)



இளவாலை ஹென்றியரசர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற கண்காட்சியில் மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கியினர் தமது நடைமுறைக் கணக்குப் பற்றிய விவரங்களைக் காட்சிப் படுத்தியிருந்தனர். அப்போது எடுக்கப்பட்ட படம். இதில் கணக்கு விவரங்களை மாணவர்கள் ஆவலுடன் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். *(3-13)*


## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் ஊழியர் நலன்புரிச் சங்க அங்கத்தவர்

திருமதி ஜஸ்மின் சந்திரிக்கா அவர்களின் பாசமிகு தந்தை

**ஆறுமுகம் கார்த்திகேசன்**

அவர்கள் விண்ணகத்தில் இறைவனடி சேர்ந்தமையையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், எமது கண்ணீரைத் காணிக்கையாகச் சொரிகின்றோம்.

வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம். (த-47379) (21.19.17) — **ஊழியர் நலன்புரிச் சங்கம் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை.**

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா நடராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்)

நவாலி தெற்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் சின்னையா நடராசா நேற்று (16.01.2006) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் இராசபூபதி அவர்களின் கணவரும் கிருபாகரியின் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ். மருத்துவபீடம்) தந்தையும் சி.சிறீதரனின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான சீவரட்ணம், பாக்கியம், இராசம்மா, தியாகராசா ஆகியோரின் சகோதரரும் அமிர்தலிங்கம், மாணிக்கலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனரும் வேதசொரூபி, திரியம்பகா, பிரியசங்கர் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2006) செவ்வாய் பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நவாலி கொத்துக்கட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

*நவாலி தெற்கு, நவாலி.* (45409)(21.19.17) — **மகள், மருமகன்.**

### திருமதி பாலசுப்பிரமணிய ஐயா இராஜராஜேஸ்வரி (இரத்தினாம்பிகை)



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் பத்தமேனி, தீர்த்தாங்குள பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி பாலசுப்பிரமணிய ஐயா இராஜராஜேஸ்வரி 16.01.2006இல் அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையா ஐயாவின் மகளும் காலஞ்சென்ற திரு .திருமதி கனகரத்தினம் ஐயாவின் மருமகளும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணிய ஐயாவின் மனைவியும் சோமசுந்தரக் குருக்கள், மனோகரன் ஐயா, பவானி, அனுஷா, விஜிதா ஆகியோரின் பாசமிகு தாயும் சவிதா, செல்வசேனக்குருக்கள், அழகேசக்குருக்கள் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஸ்ரீவக்சன், ஸ்ரீவர்சினி, கவிதா, கம்ஸா, சாருகா, சுகிர்தன், அமிர்தன், சுகர்ணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 4மணியாளவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(45409)

**தீர்த்தாங்குள பிள்ளையார் கோயிலடி, பத்தமேனி,அச்சுவேலி.** (21.19.17) — தகவல்: **பா.சோமசுந்தரக்குருக்கள் (மகன்)**


## மாதாந்த கலந்துரையாடல்

அரியாலை,ஜன.17

யாழ்.மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கல்வி உத்தியோகத்தர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறும்.

(எ-17)

## சமுர்த்தி மகா சங்கம் புதிய கட்டடத்தில்

யாழ்ப்பாணம்,ஜன.17

யாழ். சமுர்த்தி மகா சங்கம் நேற்று முதல் யாழ். பிரதேச செயலக வளாகத்தில் உள்ள கட்டடத் தொகுதியில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

இதுவரை காலம் யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வங்கியில் இந்த மகா சங்கம் தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தது.

(எ-190)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

வலி.தென்மேற்கு,ஜன.17

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயகல ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், பிரதேச விவசாய குழுக்கூட்டம் ஆகியன எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டங்களில் திணைக்கள தலைவர்கள், விவசாயிகள் சம்மேளனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்வர். (3-135)

## சமுர்த்தி நிவாரண விநியோகம்

வலி.தென்மேற்கு,ஜன.17

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது கிளைகள் மூலம் ஆறு கட்டங்களுக்கான சமுர்த்தி முத்திரைக்குரிய பொருள்களை இம்மாதம் முதல் விநியோகம் செய்யப்படுகின்றது என சங்கப் பொது முகாமையாளர் [illegible] தெரிவித்தார்.

(3-135)


## அதிஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

உரும்பிராய் லயன்ஸ் கழகத்தினால் கடந்த 15.01.2006 அன்று நடத்தப்பட்ட அதிஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு - 210,

இரண்டாம் பரிசு - 1243, மூன்றாவது பரிசு - 1222

*ஆறுதல் பரிசு பெறும் 10 அதிஷ்டசாலிகளின் இலக்கங்கள்*

**1. 1056 2. 638 3.1236 4.632 5. 775 6. 926 7. 1050 8. 606 9. 1245 10. 226**

25.01.2006 ஆம் திகதிக்கு முன் உங்கள் அதிஷ்டலாபசீட்டுடன் லயன். த.திருநாவுக்கரசு, பொருளாளர், உரும்பிராய் கிழக்கு என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**அ.ஈஸ்வரநாதன்** (தலைவர்) — **ச.ஏகாம்பரநாதன்** (J.P) (செயலாளர்)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா முத்தையா



காரைநகர் நாவலடிக் கேணியைப் பிறப்பிடமாகவும் சிதம்பராமூர்த்தி கேணியடியை நிரந்தர வசிப்பிடமாகவும் குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற ஐயம்பிள்ளை முத்தையாவின் (தபால் ஊழியர்) அருமை ம்னைவி திருமதி நாகம்மா முத்தையா நேற்று (16.01.2006) திங்கட்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா மற்றும் கமலாதேவி காலஞ்சென்ற இந்திராணி மற்றும் தர்மராஜா, செல்வராஜா (தபால் ஊழியர், தபாற்கந்தோர், காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் செல்லையா ஆறுமுகம் காலஞ்சென்ற பார்வதி மற்றும் தெய்வானை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சண்முகநாதன் (இளைப்பாறிய இ.போ.ச சாரதி), நடராசா, இரஞ்சிதா (ஆசிரியை, யா/யாழ்ற்ரன் கல்லூரி -காரைநகர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆனந்தராஜா - நிமலவதனி (சுவிஸ்), பேரின்பநாதன் - கிரிசாந்தி (ஜேர்மனி), இலட்சுமிகாந்தன் - அனித்தா (லண்டன்), உதயகுமாரி - அருட்செல்வன் (யாழ். செயலகம்), நவரட்ணராஜா- நந்தினி (நவம் ரெக்ஸ், யாழ்ப்பாணம்), சற்குணராஜா (லண்டன்), காலஞ்சென்ற கிருஸ்ணாராஜா, தயானந்தராஜா (பிரான்ஸ்), கருணாநிதி, தயாநிதி, யோகேஸ்வரன், தர்மினி, கார்த்திகா, ரேணுகா, யாழினி, ஹோசினி, ஹேதினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் வேபிஷா, அக்ஷலா, துவாரகன், தேனுஷா, கிஷாந், பானுஷா, விதுஷன், கம்ஷா, நிருத்திகன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.01.2006) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குளப்பிட்டி லேன், குளப்பிட்டி. (45404)(21.11.19) — தகவல்: **மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கேள்விப் பத்திரம்

**விடைப்புத்தகங்கள், விடைத்தாள்கள் அச்சிடுதல்**

விடைப்புத்தகங்கள் அச்சிடுவதற்கு அனுபவமுள்ள அச்சகரிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| விடைப்புத்தகங்களின் எண்ணிக்கை | - | 30,000 புத்தகங்கள் |
| விடைப்புத்தகங்களின் பக்கங்கள் | - | 12 பக்கங்கள் |
| அளவு | - | 30 செ.மீ. X 22 செ.மீ. |
| காகிதாதி வகை | - | 70 கிராம் கேள்யோபாங்க் |

01. கேள்விகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவி நிதியாளர் / வழங்கல் பகுதியில் தொடர்பு கொண்டு மாதிரியைப் பார்வையிடலாம்.
02. கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிப்போர் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 250.00 ஐயும், மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 5,000.00 ஐயும் பல்கலைக்கழகக் காசாளரிடம் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டுடன் கேள்விப் பத்திரங்களை 30.01.2006 அன்று பிற்பகல் 2 மணிக்கு முன்னர் நிதியாளர் அறையில் உள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் தபால் மூலமாகவோ அன்றில் நேரடியாகவோ சமர்பித்தல் வேண்டும். கேள்விப் பத்திர கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''விடைப்புத்தகங்கள் அச்சிடுதல் **UJ/SK/T/ 01/06**''என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்குத் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விப்பத்திரதாரர் அல்லது அவரது பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**கேள்விப்பத்திர சபை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
(தி-47389)
(54-15-12)

## நீங்கா நினைவின் தூங்கா உறவுகளின் — 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி —



அவதாரம் 20.09.1974 சிவபதம் 17.01.2002

செல்வன்
**தம்பிராசா**
**திகனொளிபவன்**
(ஆசிரியர் B.A. - Dip in Ed (Cey)

இன்றுடன் நான்காண்டு முடிந்தாலும் உன் கல்விப் பணி ஒளியைக் காண்கின்றோம்
இலங்கைப் பேராதனைப் பட்டத் தரசனே தமிழ், சமயம், ஆங்கில ஆசிரியத் திலகமே
இந்துநாகரிக விரிவுரையாளனே இனிக்குதையா உன் குரலோசை
இன்று வரை தித்திக்கும் முன்னிரை வுறைவையினியெங்கே காண்போம் ஐயா?

பிரான்பற்று,
பண்டத்தரிப்பு.
(45429)
(54-15-12)
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் ஐயம்பிள்ளை பூபாலசிங்கம்**
(முன்னாள் உரிமையாளர் 'பால்விநாயகர் ஸ்ரோர்ஸ்', கிளிநொச்சி பங்காளர் 'குமரன் சில்க்ஸ்' கொழும்பு)

அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பெரியபுலம் விநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

(45461)
(54-15-12)
உரிமையாளர், ஊழியர்கள்,
மயூரா ஹொட்டல்-கொழும்பு,
மயூரா அன்பளிப்பகம் - யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



*எமது பிரதேச செயலகத்தில் அலுவலகப் பணியாளர் சேவையில் கடமைபுரியும்*
**அமரர் சின்னத்தம்பி யோகநாதன்**
(குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கு, புத்தூர்)

அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயருறுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதேச செயலகம்,
வலிகிழக்கு, கோப்பாய்.
(தி-47388)
(54-15-12)
பிரதேச செயலக நலன்புரிச் சங்கம்,
கோப்பாய்.

## கண்ணீர் அஞ்சலி

*சென்ஜோன் அம்புலன்ஸ் யாழ். வடக்கு மாவட்ட ஆணையாளர் திரு. இ.போ ஜான் அவர்களின் மனைவி*

திருமதி **போ.அர்த்தனாரீஸ்வரி,** மற்றும் **புத்திரிகளான**
**செல்வி போ.சண்ணுகா, செல்வி போ.ரேனுகா**

ஆகிய மூவரும் அகால மரணமடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைவதுடன் அவர்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(45429)
(54-)
தளபதி/ஆணையாளரும், சென்ஜோன் அம்புலன்ஸ்,
தேசிய தலைமையகம் கொழும்பும், மாவட்ட ஆணையாளரும்,
அங்கத்தவர்களும், சென்ஜோன் அம்புலன்ஸ் யாழ்/தெற்கு மாவட்டம்.

# இந்துமா மன்ற ஏற்பாட்டில் அடுத்த மாதம் கொழும்பில் மாநாடு

யாழ்ப்பாணம்,ஜன.17

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்50 ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு 'இலங்கை வாழ் இந்து மக்கள் எதிர்நோக்கும் சவால்களும் பிரச்சினைகளும்' என்னும் பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாநாடு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் இந்து ஆலய வழிபாடு - ஆலய நிர்வாகப் பிரச்சினைகள், இந்து மாணவர்களின் கல்விப் பிரச்சினைகள் இந்து மக்களின் சமூக, கலாசார பிரச்சினைகளும் சிவதொண்டு அணியின் பங்களிப்பும் என்னும் பொருள்களில் சிறப்பு அரங்குகள் நடை பெறும்.

மேற் குறிப்பிட்ட அரங்குகளில் தொகுத்து சமர்ப்பிக்கவும், ஆராயப்படவும் கருத்துரைகள் விதப்புரைகள் என்பனவற்றை அனுப்பிவைக்கலாம். இந்த ஆக்கங்களை பெப்ரவரி மாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் அகில இலங்கை இந்து மாமன்றம், இல.91/5,சேர். சிற்றம்பலம் ஏகார்டினர் மாவத்தை, கொழும்பு - 02' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண் டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-204)


**UNIVAC**
**Software Engineering Park**

சிங்கப்பூர் சிஸ்ரம் கொம்பியூட்டர் நிறுவனத்தின் Software Engineering பயிற்சிக்கான போட்டிப்பரீட்சை 05-02-2006ம் திகதி நடைபெறும்.

இப் போட்டிப்பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களிற்கு 16 மணித்தியால இலவச IT வகுப்பு (கருத்தரங்கு) நடை பெற உள்ளதால் போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைவரும் உடன் சமுகமளிக்கவும்.

213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ஒவ்வொரு பாடசாலைக்கும் இணையத்தளம்**

யுனிவெக் நிறுவனத்தில் ஒவ்வொரு பாடசாலைக்கும் இணையத்தளம் வடிவமைக்கப்படுகின்றது. இதுவரை இணையத்தளம் இல்லாத பாடசாலைகள் தங்கள் பாடசாலையின வரலாறு, புகைப்படங்கள், தேவைகள் போன்ற அனைத்து தகவல்களையும் எமது நிறுவனதிற்கு வழங்குமாறு கேட்டுகொள்கின்றோம்.

**UNIVAC**
**Software Engineering Park**
213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**மனோகரா** யாழ்ப்பாணம்
அதிரடி பொங்கல் வெளியீடு



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேநிள வெளியீடு
(Dts நவீன ஒலிநுட்பத்துடன்)
**ஆதி**
இளைய தளபதி விஜய், த்ரிஷா மற்றும் பலர் நடிப்பில்
(வருகிறான் வரிப்புலி நாதியாய்)
நாயரிப்பு : S.A. சந்திரசேகர்
இசை : வித்தியாசாகர்
இயக்கம் : ரமணா
தினசரி:
பு.நே.
10.30, 1.30, 4.30, 7.30

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்
பொங்கல் வெளியீடு
அல்டிமேட் அஜித், லைலா
மற்றும் பலர் நடித்த
**பரமசிவன்**
காட்சி நேரம்:
8.30, 12.00, 3.30



**ராஜா** யாழ்ப்பாணம்



சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த
**சரவணா**
இயக்கம்: K.S.ரவிக்குமார்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
காட்சிநேரம்:
பு.நே. 10.30, 2.15 மட்டும்

**நாகம்ஸ்** சுன்னாகம்



விஷால், மீராஜஸ்மின் மற்றும் பலர் நடித்த
**சண்டைக் கோழி**
10.30, 2.30, 5.30


## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜெயராஜா மல்லிகாதேவி



உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயராஜா மல்லிகாதேவி (றஞ்சினி) அவர்கள் 13.01.2006 அன்று டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் சரவணை ஜெயராஜா (டென்மார்க்) அன்பு மனைவியும் திரு. திருமதி அம்பலவாணர் நல்லதங்கம் தம்பதியினரின் அருமை மகளும் காலஞ்சென்ற திரு. திருமதி சரவணை முத்துப்பிள்ளை தம்பதியினரின் அருமை மருமகளும் இந்துஜாவின் (டென்மார்க்) அருமைத்தாயாரும் பாக்கியதேவி (சுவிஸ்), ஜெயதேவன் (நோர்வே), நகுலாதேவி (விடத்தற்பளை), சத்தியாதேவி (டென்மார்க்), ஜெயதீபா (கொழும்பு), ஆகியோரின் அருமைச் சகோதரியும், சிவபாதம் (சுவிஸ்), நந்தா(நோர்வே), கந்தசாமி (விடத்தற்பளை), பிறேமானந்தன் (குமார்-டென்மார்க்), ராஜேந்திரன், (ராஜ்-கனடா) ஆகியோரின் அருமை மைத்துனியும், தாமோதரம்பிள்ளை (ஓய்வுபெற்ற உப அஞ்சல் அதிபர்), பராசக்தி, செல்லத்துரை, பத்மாவதி, செல்வராஜா, பூபதி ஆகியோரின் மைத்துனியும் டிலக்சி, சகான், செந்தூரன், செந்தூபியா, பிருந்துபியா, துவாரகன், கஸ்தூபியா, பிரசீத் ஆகியோரின் சித்தியும் சாரங்கி, கிருசாந் ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் டென்மார்க்கில் நடைபெறும்.

**விடத்தற்பளை,**
**மிருசுவில்.**
**தொ.பே.: 0776158551**
(45420)
(54-15-12)
தகவல்:
**இ.அம்பலவாணர் (தந்தை).**
**திரு.திருமதி கந்தசாமி (மைத்துனர்.)**

### திருமதி அர்த்தநாரீஸ்வரி போஜான்
### திருமதி ரேணுகா தியாகேஸ்வரன்
**(ஆசிரியை, யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை)**
### செல்வி சண்ணுகா போஜான்

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கனகசபை முதலியார் வீதி, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட நாகேந்திரம் போஜான் (பரியோவான் முதலுதவிச்சங்க யாழ். கிராமிய மாவட்ட ஆணையாளர், இலங்கை முதலுதவிச் சங்கத் தலைவர், இலங்கை சீமெந்து கூட்டுத்தாபன யாழ். காரியாலய விற்பனை உத்தியோகத்தர், சேமநல உத்தியோகத்தர், காசாளர்), அவர்களின் அன்பு மனைவியும் பாசமிகு புதல்விகளும் தியாகராஜா தியாகேஸ்வரன் (ஆசிரியர்- வவுனியா), அவர்களின் அன்பு மனைவியும், மாமியாரும், மைத்துனியும், உல்லாசனன் (ஆசிரியர், யா/மத்திய கல்லூரி) அவர்களின் அருமைத் தாயாரும் அன்புச் சகோதரிகளும், வேல்முருகானந்தன் (கிளை முகாமையாளர், தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்) அவர்களின் அன்புச் சகோதரியும் மருமக்களுமான அர்த்தநாரீஸ்வரி, ரேணுகா, சண்ணுகா ஆகியோர் 16.01.2006 அன்று அகால மரணமானார்கள். அவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று (17.01.2006) செவ்வாய்க் கிழமை அவர்களது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு பி.பகல் 2 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**17, கனகசபை முதலியார் வீதி,** நா. போஜான் (கணவர்-தந்தை)
மானிப்பாய். தி. தியாகேஸ்வரன் (மருமகன்,கணவர்,மைத்துனர்)
(தி-47386) (54-15-12) போ. உல்லாசனன் (மகன், சகோதரன்)

### சிவதாசன் சிறீகணேசராசா (ஓட்டோ கணேஸ்)



41/9, மானிப்பாய் வீதி,கோணாந்தோட்டம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த சி. சிறீகணேசராசா அவர்கள் நேற்று (16.01.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவதாசன்-கௌரி (இந்தியா) தம்பதியரின் அன்பு மகனும் கம்ஷவதனியின் (ஆசிரியை, யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி) அன்புக் கணவரும், நிசாந்தன், நிதர்சினி, நிதர்சன், சஞ்சிகா ஆகி யோரின் அன்புத் தந்தையும் விவேகானந்தன், காலஞ்சென்ற ஜெகநாதன், செந்தில்வேல் (இந்தியா), இராஜேஸ்வரி, விஜயராணி, மகேஸ் ரத்தினம், ஸ்ரீஸ்கந்தராசா, மதியழகன் (கொழும்பு), மணிவண்ணன் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புச் சகோதரனும் நடராசா, வள்ளியம்மை (நெடுந்தீவு), தம்பதியரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2006) செவ்வாய்க் கிழமை பி.ப. 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**41/9, மானிப்பாய் வீதி,**
**கோணாந்தோட்டம்.**
**யாழ்ப்பாணம்.**
(45430)
(54-15-12)
தகவல்:
**சி. கம்ஷவதனி**
(மனைவி).

## சபிண்டிகரண அழைப்பு



மண்ணுலகம் 01-01-1935 விண்ணுலகம் 18-12-2005

கடந்த (18.12.2005) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் எய்திய எங்கள் குடும்பத் தலைவி

அமரர்
**சின்னத்தம்பி ஆச்சிக்குட்டி**
அவர்களின்

*அந்தியேட்டி சபிண்டிகரணம் இன்று (17.01.2006) செவ்வாய்க் கிழமை மு.பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பமாக வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

**"தாயகம்"**
**ஊரெழு கிழக்கு, ஊரெழு.**
(45425)
(54-15-12)
- பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேன்முறையீட்டு நீதிமன்றம் சந்திரிகாவுக்கு அழைப்பாணை

## இலவச காணி பெற்ற வழக்கில்

கொழும்பு, ஜன.17

அரசாங்கக் காணியொன்றை இலவசமாகப் பெற்ற வழக்கு விசாரணை ஒன்றுக்காக அடுத்த மாதம் இருபதாம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு அழைப்பாணை அனுப்ப மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பெறுமதிமிக்க அரச காணியொன்றை வழங்கிய விவகாரம் தொடர்பில் 'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் தாக்கல் செய்திருந்த மனுவை ஆராய்ந்து விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான கே.ஸ்ரீபவன், சிசிர டி ஆப்ரூ ஆகியோர் மேற்கண்ட உத்தரவை பிறப்பித்தனர்.

1986ஆம் ஆண்டின் நான்காம் இலக்க ஜனாதிபதி சிறப்புரிமைகள் சட்டத்தை மீறி முன்னாள் ஜனாதிபதிக்கு மாதிவெல பகுதியில் ஒன்றரை ஏக்கர் காணி இலவசமாக வழங்கப்பட்டிருப்பதாகவும், இவ்வாறான தீர்மானமொன்றை எடுக்கும் அதிகாரம் அமைச்சரவைக்கு இல்லையெனவும் தெரிவித்து 'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

மேற்படி சட்டதிட்டத்தின்படி முன்னாள் ஜனாதிபதியொருவர் இலவச வீடு, அலுவலக செலவினம், பாதுகாப்பு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் போன்ற மூன்று அம்சங்களை மட்டுமே பெற முடியுமென்று மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜே.சி.வெலியமுன நேற்று நீதிமன்றத்தில் வாதிட்டார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள விசேட பாதுகாப்பு மற்றும் ஆளணி வசதிகளை ஆட்சேபித்து 'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் தாக்கல் செய்த மற்றுமொரு மனுவையும் பெப்ரவரி 20ஆம் திகதி நீதிமன்றில் எடுத்துக் கொள்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்திருக்கிறது. (க)

# ஐ.தே.க. தலைமைப் பூசல் தீர்ந்தது

கொழும்பு, ஜனவரி 17

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கட்சிக்குள் கிளப்பப்பட்டுவந்த தலைமை விரோத எதிர்ப்புப் பிரச்சினை நேற்று அக்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

கட்சியின் பிரதித் தலைவரும், கட்சித் தலைவரான ரணிலுக்கு போட்டியாகத் தலைமைப் பதவிக்குப் பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டவருமான கரு ஜெயசூரியவுக்கு அதிக அதிகாரங்களுடன் கூடிய தவிசாளர் பதவியை வழங்குவதற்கு ரணில் விக்கிரமசிங்க முன்வந்ததை அடுத்தே இப்பிரச்சினை இணக்கமாகத் தீர்ந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்பாராதவிதமாக ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தோற்றதை அடுத்து அவருக்கு எதிராகக் கட்சிக்குள் அதிருப்தியாளர்கள் போர்க்கொடி தூக்கினர்.

பிரதித் தலைவர் கரு ஜெயசூரியவைத் தலைவராக்கும் முயற்சிகள் அதிருப்தியாளர்களால் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் நேற்று கட்சியின் நாடாளுமன்றக் குழு கூடியது. அதற்கு முன்னர் அதிருப்தி அணியை - கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அழைத்துப் பேசினார். அதில் சில அடிப்படை விடயங்களுக்குத் தீர்வு எட்டப்பட்டதாகத் தெரிகிறது. இதன்மூலம் கட்சித் தலைமைப் பூசல் சுமுகமாகத் தீர்க்கப்பட்டது. (க)

## நெல்லியடியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரே கொல்லப்பட்டவராவார். இராஜ கிராமத்தில் உள்ள தனது வீட்டில் இருந்து தொழில் புரிவதற்காக நெல்லியடி நோக்கிச் சைக்கி ளில் சென்று கொண்டிருந்த இவரை நெல் லியடி - கொடிகாமம் வீதியில் வைத்து மோட் டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுத தாரிகள் தலையில் சுட்டுக்கொன்றனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-70-15-78-117-173)

## மானிப்பாய் ராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீதான கொடூரக் கொலைச் சம்பவமாகும். இச்செயல் தமிழ் மக்கள் தமது வீடுகளில் கூட கௌரவமாக உயிருடன் வாழ முடியாது என்பதை வெளிக்காட்டும் செயலாகும்.

இதனைச் செய்தவர்கள் ஏற்கனவே இந்த வீட்டுக்குச் சென்று அச்சுறுத்தல் விடுத்த சிறிலங்கா இராணுவப் புலனாய்வாளர்களும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுமே ஆவர்.

மானிப்பாய் சந்தியில் உள்ள இராணுவ முகாமில் இருந்து நடுநிசியில் வெளிவந்த வெள்ளை வானில் வந்தவர்களே இந்த கொடூரச் சம்பவத்தைப் புரிந்துள்ளனர். மனிதத்தை நேசிப்பவர்களின் நெஞ்சங்களை அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது இச்சம்பவம் சுதந்திர வேட்கை கொண்ட மக்களை அச்சுறுத்தி அடிபணிய வைப்பதற்கே படையினர் இக் கொடூரத்தைப் புரிந்துள்ளனர்.

இந்தப் படுகொலைகளின் பின்னணியில் படைத்தரப்பினரே உள்ளனர் என்பதற்கான ஆதாரங்களை இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் நாம் தெரியப்படுத்தியுள்ளோம்.

இந்தக் கொலை சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட வாகனம் பின்னர் நவாலி நாச்சிமார் கோவில் வீதியூடாக பிப்பிலிச் சந்தியையடைந்து மீண்டும் மானிப்பாய் சந்தியில் உள்ள இராணுவ முகாமுக்கே சென்றுள்ளது.

இந்தப் படுகொலைகள் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்ட வேளையில் அப்பகுதியில் ரமேஷ், மகேஷ் பண்டார ஆகிய ராணுவப் புலனாய்வாளர்கள் இருவர் 'மேற்' ரக மோட்டார் சைக்கிளில் மக்களைப் பார்த்து கேலி செய்துகொண்டு சென்றுள்ளனர்.

இத்தகைய சம்பவங்களை என்றுமே எங்களது மக்கள் மன்னித்ததில்லை. இதற்குக்காரணமான எதிரிகளும் துரோகிகளும் எமது மக்களிடம் பாடம் படிக்கும் வரலாற்றுச் சூழல் விரைவில் உருவாகும். இதனையே அண்மையில் படைத் தரப்பினரால் மேற்கொள்ளப்படும் கொலைச் சம்பவங்கள் வெளிக்காட்டுகின்றன.

இந்தக் கொடூரக் கொலைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இயல்புநிலை மீண்டும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகொலைக்கு உட்படுத்துதல், மாணவர்களைக் கண்மூடித்தனமாகத் தாக்குதல், கடல்வலயத்தடை என அரச வன்முறை தமிழ்ச் சமூகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. குறிப்பாக உயர்கல்வி மாணவர்கள் மீதும் பல்கலைக்கழக சமூகத்தின் மீதும் துப்பாக்கிச்சூடு, அடிதடிப் பிரயோகம், சோதனை என்ற போர்வையில் அச்சுறுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால், மாணவர்கள் கற்கக் கூடிய உளநிலை பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஆசிரியர்கள் கற்பிக்கக்கூடிய மனநிலையிலும் இல்லை.

இந்த நிலைமைகள் தொடர்பாக யாழ். அரச அதிபர், ஜனாதிபதி ஆகியோருக்கும் இராணுவத்தரப்பு, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, சர்வதேச அமைப்புகள் என்பவற்றிற்கும் எழுத்து மூலமாக நேரடியாகவும் தெரியப்படுத்தியபோதும் எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லை. மாறாக எங்கும் இராணுவப் பிரச்சினைகள் அதிகரிக்கப்பட்டு, சூழல் மேலும் மோசமடைந்து செல்கின்றது. மாணவர்கள், மக்கள் வீதிக்கு இறங்கி நடமாட அஞ்சுகின்றார்கள். எனவே, மாணவர்கள் கல்வி கற்கக் கூடியதும், ஆசிரியர்கள் கற்பிக்கக்கூடியதுமான இயல்புநிலை தோன்றும்வரை புரிந்துணர்வு ஒப்பந்தம் ஸ்ரீலங்கா படைகளால் சரியாகக் கடைப்பிடிக்கப்படும்வரை எமது கற்றல் செயற்பாடுகளை இடைநிறுத்துவதென பல்கலைக்கழக மாணவர் மன்றம் தீர்மானித்துள்ளது. மாணவர், மக்கள் வாழ்வில் இயல்புநிலை ஏற்பட்டதும் மீண்டும் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வதெனத் தீர்மானித்துள்ளோம் என்பதனை தங்களுக்கு மனவருத்தத்துடன் தெரியப்படுத்துகின்றோம் - என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இராசபாதையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தார்.

நெல்லியடியைச் சொந்த இடமாகக் கொண்ட கே.முரளிதரன் (வயது 26) என்பவரே சுடப்பட்டவராவார். கொழும்பில் தங்கி இருந்த அவர் வெளிநாடு ஒன்றில் இருந்து வந்த தமது சகோதரர் ஒருவருடன் யாழ்ப்பாணம் வந்த சமயத்திலேயே சுடப்பட்டிருக்கின்றார்.

கரந்தன் பகுதியில், இராச பாதையால் தனது சகோதரனுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது அருகே மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இவர் மீது வேட்டுக்களைத் தீர்த்தனர் என்று கூறப்படுகின்றது.

(ஐ-6-12-15-17-72-190)

## மனைவியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது கண்மூடித்தனமாக வந்திருந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டார்கள். இதில் எனது மனைவியும் மூத்த மகளும் சூடுபட்டு வீழ்ந்தனர்.

அதேநேரம் உள்ளே நின்ற எனது மகனும் காயப்பட்டார். ஆயுததாரிகள் செல்லும் போது எனது காலில் சுட்டுவிட்டுச் சென்றார்கள்.

எங்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு யாரும் உடனடியாக முன்வரவில்லை - இவ்வாறு கூறினார். (ஒ-86-8)

## நோர்வேத் தூதர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் எரிக் சொல்ஹெய்மின் கிளிநொச்சி விஜயத்துக்கான நிகழ்ச்சிநிரல் தொடர்பாகவும் - இப்பேச்சுக்களில் ஆராயப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இச் சந்திப்பையடுத்து தமிழ்ச்செல்வன் செய்தியாளர் மாநாடு ஒன்றையும் நடத்த விருக்கின்றார். (ஒ-3)

## அக்கரைப்பற்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் சதீஷ்குமார் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

என்ன காரணத்திற்காக இவர்கள் சுடப்பட்டனர் என்பது பற்றித் தெரியவரவில்லை. அக்கரைப்பற்று பொலீஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (க)

## தாய், 2 புதல்விகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு முன்பாக செல்லமுத்து கனகசபாபதி வீதியில் - அமைந்துள்ள நாகேந்திரம் போஜன் என்பவரின் இல்லத்திலேயே இந்தப் பயங்கரம் நிகழ்ந்திருக்கிறது.

நள்ளிரவு தாண்டி சற்றுநேரத்தில் வெள்ளை வான் ஒன்றில் சிவில் உடையில் வந்த ஒன்பது பேர் அடங்கிய குழு ஒன்று வீட்டில் உறக்கத்தில் இருந்தவர்களைக் குரல் கொடுத்து எழுப்பியிருக்கிறது. தங்களை இராணுவத்தினர் என்று தெரிவித்து, வீட்டைச் சோதனையிடப்போவதாகக் கூறிய அக்குழுவினர் வீட்டில் இருந்த அனைவரையும் வெளியே அழைத்துள்ளனர். பீதியடைந்த குடும்பத்தினர் கதவைத்திறந்து கொண்டு வெளியே வந்தபோது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தந்தை, தாய், மகன், மகள்மார் இருவர், மகள் ஒருவரது கணவர் உட்பட ஏழுபேர் அந்த வீட்டில் இருந்துள்ளனர்.

ஆயுதபாணிகள் முதலில் மகள் ஒரு வரையும் பின்னர் தாய் மற்றும் ஏனையோரையும் நோக்கிச் சுட்டிருக்கின்றனர்.

இந்த வெறியாட்டம் முடிந்த சிறிது நேரத்தில் இனந்தெரியாத அந்தக் குழுவினர் வானில் ஏறித் தப்பிச் சென்றுவிட்டனர் என்று கூறப்படுகிறது.

சரமாரியான வேட்டுக்கள் துளைத்ததில் போஜன் அர்த்தநாரீஸ்வரி(வயது 51 - தாய்), தியாகேஸ்வரன் ரேணுகா(வயது 30 - மகள் - மானிப்பாய் சிந்மயபாரதி வித்தியாலய ஆங்கில ஆசிரியை), போஜன் சண்முகா (வயது -24- இளையமகள்) ஆகிய மூவரும் சம்பவம் நடத்த வீட்டிலேயே உயிரிழந்தனர்.

தந்தையான நாகேந்திரம் போஜன் (வயது-54) குண்டுகள் தாக்கிப் படுகாயம் அடைந்தார்.மகன் போஜன் உல்லாசனன் (வயது - 26) என்பவரும் படுகாயங்களுக்குள்ளானார். இவர் யாழ்.மத்திய கல்லூரியின் கணித ஆசிரியர் ஆவார்.

உயிரிழந்த மூத்த மகளின்(ரேணுகா)கணவரான தியாகேஸ்வரன் காயம் எதுவும் இன்றி உயிர் தப்பிவிட்டார்.

நள்ளிரவில் தீர்க்கப்பட்ட வேட்டுச் சத்தங்களால் அந்தப் பிரதேசம் அதிர்ந்த போதிலும் அயலவர்கள் எவருமேஅச்சம் காரணமாக வெளியேவரவில்லை. இதனால் காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்வதற்கு நீண்ட நேரம் பிடித்தது.

சம்பவம் நடைபெற்று சுமார் ஒன்றரை மணிநேரத்தின் பின்னரே யாழ்.மருத்துவமனைக்குத் தகவல் வழங்கப்பட்டு அங்கிருந்து அம்புலன்ஸ் வண்டி அழைக்கப்பட்டது. பின்னர் காயமடைந்த இருவரும் அம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டனர். உயிரிழந்த மூவரது சடலங்களும் கொண்டுவரப்பட்டன. மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் மரண விசாரணை நடத்தினார். சம்பவ இடத்தையும் அவர் சென்று பார்வையிட்டார். மரண விசாரணையின் பின்னர் சடலங்கள் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

சம்பவம் நடந்த வீட்டின் உரிமையாளர் நாகேந்திரம் போஜன் இலங்கை சாரணர் சேவையில் காங்கேசன்துறை மாவட்ட சாரண ஆணையாளராக நீண்டகாலம் சேவையாற்றியவர். அத்துடன் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் - முதலுதவிப் படைப்பிரிவின் வடபிராந்திய ஆணையாளராகவும் பணியாற்றியவர்.

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலையில் நேரக்கணிப்பாளராக தொழில் புரிந்தும் வந்தவர். கொல்லன்கலட்டியைச் சொந்த இடமாகக் கொண்ட குடும்பத்தினர் 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து மானிப்பாயில் வாழ்ந்தனர். ஆயுதபாணிகள் நள்ளிரவில் நடத்திய இந்தக் கோர வெறியாட்டம் குடாநாட்டு மக்களை பீதியில் உறைய வைத்திருக்கின்றது.

(ஐ-3-8-12-14-15-69-78-86-90-139)


**CHEMISTRY CENTRE**
Temple Road (Greenpark முன்னே)
A/L 2008 Tue, Thurs 4 - 5
**PHYSICAL CHEMISTRY**
பிரத்தியேகப் பிரிவு
Mon, Tur, Wed, Thurs 12 - 1
ஆரம்பம் 18/1 புதன்
"வளங்கள்" Thurs 5 - 6
ஆரம்பம் 19/1
By: அன்பழகன் B.Sc

**மாபெரும் இரசாயனவியல் கருத்தரங்கு**
இன்றும் [17/01] } 10 a.m.
வியாழன் [19/01] }
By: அன்பழகன் B.Sc
"அவத்தை சமனிலை"
Sat, Sun 1 - 2
"வளங்கள்"
Sat, Sun 10 - 11
**NEW SCIENCE CENTRE** யாழ். நகர்


## மரண அறிவித்தல்

### மடுத்தீன் அந்தோனிப்பர்னாந்து

### (பொன்னுத்தம்பி)



மண்டைதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இல. 226, பிரதான வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பர்னாந்து (15.01.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மடுத்தீன் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அந்தோனிமுத்து - றோசம்மா தம்பதியரின் மருமகனும் செலினம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மருசலினம்மா மற்றும் சிங்கராயர் (பிரான்ஸ்), பாக்கியநாதர் (கனடா), மரியசூசை (லண்டன்), திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், அழகக்கோன் (கணக்காளர்- லண்டன்), யசிந்தா, மேரிமர்கிறேற், பிரான்சிஸ் சேவியர், மேரிறோஸ், அருட்திரு. அன்ரனிப்பிள்ளை (பங்குத்தந்தை, மானிப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தா (லண்டன்), பாலசிங்கம், சூசை தாஸ், யுவக்கீன் பிள்ளை, லில்லி மாகிறேற் ஆகியோரின் அன்பு மாமனும் Dr. ஷிரான்(லண்டன்),பிறெண்டா(மருத்துவ பீட மாணவி, லண்டன்), சரோஜினி (ஜேர்மனி), அருட் சகோ. நிர்மலறஞ்சினி (தி.கு.) சாமினி, றூபினி, உஷாந்தினி, சுரேன் (F.R.C- UNICEF), சுதாசன், சுகந்தன், சுலக்ஷனா, சுலக்ஷன், மிக்சன் அருட் சகோ. கிறுஸ்தர்சினி (தி.கு.), அனோ ஜினி ஆகியோரின் அன்புப் பேரனும், சுரேக்கா, அனோஜன், அனோஜிக்கா, அக்ஷன் (ஜேர்மனி) ஆகியோரின் பூட்டனுமாவார். அன்னாரின் பூதவுடல் நாளை (18.01.2006) புதன்கிழமை காலை 10 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு மண்டைதீவு புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
அருட் திரு.அ.ப.அன்ரனிப்பிள்ளை (மகன்)

இல. 226, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(45396)(17-34)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.01.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org